# ஆண்டறிக்கை

# 2014

PIM

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

# உள்ளடக்கம்


1. அறிமுகம்
2. மு.ப.நி. நோக்கு, பணி மற்றும் பெறுமானங்கள்
3. பணிப்பாளரின் மீளாய்வு
4. அடைவுகள் : பட்டப்பின்படிப்பு கல்வி
5. ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்
6. பயிற்சி மற்றும் உசாவுகளை சேவைகள்
7. கல்விசார் மற்றும் பௌதீக சுற்றாடல் மேம்பாடு
8. மனித வளங்கள் அபிவிருத்தி
9. நிருவாக மற்றும் நிதிசார் வினைத்திறன்
10. முகாமைத்துவ சபை
11. கற்கைச் சபை
12. எதிர்கால திட்டங்கள்
13. கணக்காய்வு அறிக்கையும் பதில்களும்

# அறிமுகம்

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஓரளவு சுயாதீனத்தன்மையுள்ள அமைப்பாகும். அதன் நோக்கங்களாக பல்வேறுபட்ட முகாமைத்துவ, நிருவாக கற்கைகளின் துறைகளில் பட்டப்பின்படிப்பு அறிவுருத்துகை, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை வழங்குவதனூடாக இலங்கையில் முகாமைத்துவத் துறையில் உயர் கல்வி, தொழில்வாண்மைத்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதாகும். இன்று அது தொழில்சார் முகாமைத்துவ கல்வி மற்றும் பயிற்சியின் தேசிய நலன்களில் பரந்த அளவில் பணியாற்றி ஆயிரக்கணக்கான சிரேட்ட மட்ட முகாமையாளர்கள், நிருவாகிகளுக்கு கற்றல் மற்றும் திறன் அபிவிருத்திக்கான சவால்மிக்க வாய்ப்புகளை வழங்குகின்றது. இலங்கையில் உயர் முகாமைத்துவ கல்வித் துறையில் முன்னோடியாக இருந்து மு.ப.நி புத்தாக்க மற்றும் பரப்புகை முகாமைத்துவ அனுபவ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் உயர் கற்றல் மாற்றீடுகளை தேடுபவர்களுக்கும் தலைமைத்துவத்தை வழங்கி நிற்கின்றது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழான கட்டளைச்சட்டத்தினால் 1986 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட மு.ப.நி. இலங்கை பல்கலைக்கழக முறைமையில் காணப்படுகின்ற ஏழு பட்டப்பின்படிப்பு நிறுவகங்களில் ஒன்றாக இருக்கின்றது. ஒப்பீட்டு ரீதியில் இது வயது குறைந்ததொன்றாக இருப்பினும் நிறுவகங்களுக்கிடையில் இது அதிக மாணவர் சனத்தொகையை கொண்டதாக இருப்பதோடு நாட்டின் பல்கலைக்கழக முறைமையில் ஒரேயொரு சுய நிதியிட்ட உயர் கற்றல் நிறுவனமாக திகழ்கின்றது.

நிறுவகத்தின் வரலாறானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் பட்டப்பின்படிப்பு கற்கைகள் பிரிவொன்று தாபிக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டைப் பின்னோக்கி செல்கின்றது. பிரிவானது இரண்டு கனேடிய பல்கலைக்கழகங்களுடன் – ஒட்டாவா பல்கலைக்கழகம், மற்றும் கால்டன் பல்கலைக்கழகம் – இணைந்து சீடா நிறுவனத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவத் துறையில் பட்டப்பின்படிப்பு கற்கைகளை ஆரம்பித்தது. 1986 ஆம் ஆண்டில் பிரிவானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கீழ் தனியான நிறுவகமொன்றாக தரமுயர்த்தப்பட்டது. 1995 ஆம் ஆண்டில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது கொழும்பு 8, லெஸ்லி ரணகல மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.

## 2. மு.ப.நி. நோக்கு, பணிக்கூற்று மற்றும் பெறுமானங்கள்

நோக்கு

தெற்காசியாவில் முகாமைத்துவ துறையில் கீர்த்திமிக்க மத்திய நிலையமொன்றாக மாறுதல்

பணிக்கூற்று

சர்வதேச பார்வையுடனும் உள்ளூர் அடித்தளத்துடனும் கூடிய தலைவர்களை விருத்திசெய்வதனூடாக நாம் மனித சிந்தனைசக்தியை தூண்டிவிடுகின்றோம். அவ்வாறுசெய்வதனூடாக நாம் புத்தாக்க கற்பித்தல், முன்னணி ஆராய்ச்சி, பங்காண்மையை வலுப்படுத்தல், பசுமை உட்கட்டமைப்பு மற்றும் நல்லாட்சி என்பவற்றை பின்பற்றுகின்றோம்.

# பெறுமானங்கள்

அவா : தொழில்வாண்மையை காட்டுவதில் விளைவுகளை நோக்கிய உற்சாகமும் ஆர்வமும்

**பிரதான நடத்தைசார் அடையாளாங்கள் (பி.ந.அ)**

1. தொழிலுடன் இணைந்த பணிகள் பற்றிய தெளிவுகொண்டவரா
2. பணிகளை கையாளுவதில் உற்சாகத்தன்மைகிக்கவரா
3. புதிய தீர்வுகளை காண்பதில் புத்தாக்கமிக்க சிந்தனை
4. நிறுவனசார் வெற்றிக்கான ஒருவரது பங்களிப்பு பற்றி உணர்வள்ளவரா
5. நோக்கங்களை அடைவதற்கு மேலதிக சக்தியை வழங்க ஆர்வமுள்ளவர்

**நேர்மைத்தன்மை:** நிறுவனத்தின் சிறந்த நலனை மனதிற்கொண்டு ஒழுக்கவியல் தன்மையுடன் நடத்தல்

**பிரதான நடத்தைசார் அடையாளாங்கள் (பி.ந.அ)**

1. ஒருவரின் நடத்தையில் நெர்மைத்தன்மை வாய்ந்தவரா
2. இரகசியமான விடயங்களை கையாள்வதில் நம்பகமானவர்
3. நிறுவனத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளினுள் பூரணமான தன்னைநடத்துபவர்
4. ஒழுக்கமற்ற செய்பாடுகளுக்காக தொழிற்படமாட்டார்.
5. சுய நலனை விட நிறுவனத்தின் தேவையை முற்படுத்துவார்.


**சிந்தனைஉணர்வு:** வியங்களை சுயவழிப்புணர்வுடன் செய்வதில் நோக்கத்திற்கும் செயற்பாடுகளுக்கும் கவனம் செலுத்துதல்

**பிரதான நடத்தைசார் அடையாளாங்கள் (பி.ந.அ)**

1. விபரங்களுக்கு கவனம் செலுத்துதல்
2. எந்தவொரு நேரத்திலும் தேவையான செயற்பாடுகள் குறித்து விழிப்புணர்வுடன் இருத்தல்
3. நிலைமைகளை பக்கச்சார்பற்று, திறந்த மனதுடன் பார்த்தல்
4. கையிலுள்ள பணிகள் தொடர்பில் பூரண அவதானத்துடன் இருத்தல்
5. நேரத்தை பயன்படுத்துவதில் வினைத்திறன்கொண்டவர்

## முழுதுமளாவிய அனுகுமுறை

## எமது நிறுவனத்தின் கீர்த்தி




அடுத்த ஐந்து வருடங்களுக்கான மு.ப.நி.ஐந்து இலக்குகள் பின்வருமாறு:

1. முதலாவது இலக்கு : மு.ப.நி கல்விசார் நோக்கெல்லையை மேம்படுத்துதல்
2. இரண்டாவது இலக்கு : மு.ப.நி ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளில் கீர்த்தியின் நோக்கெல்லையை மேம்படுத்துதல்
3. மூன்றாவது இலக்கு : கைத்தொழில், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்சார் அமைப்புகளுடன் பங்காண்மைகளை வளர்த்தல்
4. நான்காவது இலக்கு: சுமுகமான கற்றல் சூழலொன்றை வழங்குவதற்காக த.தொ.தொ விருத்திசெய்தலும் பசுமை உட்கட்டமைப்பு வசதிகளை உறுதிப்படுத்தலும்
5. ஐந்தாவது இலக்கு: நிதிசார் மற்றும் நிருவாக இணக்கப்பாட்டுடன் வெளிநாட்டு வருவாயின் வருமான வளர்ச்சி உள்ளடக்கத்தை உறுதிப்படுத்தல்.

இதன் பிரகாரம் 20 உபாயமுறை நோக்கங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

# மு.ப.நி தரக் கொள்கை

கற்பித்தல், ஆராய்ச்சி, உசாவுகை மற்றும் தொடர் கல்வி என்பவற்றில் எமது அனைத்து முயற்சிகளிலும் கீர்த்தியின் சர்வதேச தரத்தை பின்பற்றுவதற்கும் அனைத்து நேரங்களிலும் சுய மதிப்பீடு மற்றும் தொடர் மேம்பாடு போன்ற செயன்முறையூடாக எமது மக்கிய மற்றும் ஆதரவு தொழிற்பாடுகளில் தெடர்ந்தும் வகைகூருவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். நாம் தேர்ச்சிமிக்க, வாடிக்கையாளர் மையப்படுத்திய பதவியரை விருத்திசெய்து பீடத்தில் பயிற்சி, ஏனைய ஆதரவு வசதிகளை வழங்குவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். எமது முழுதுமளாவிய கீர்த்தியைஅடைவதற்கான எமது நிறுவனசார் செயன்முறைகளை தொடராக மேம்படுத்துவதற்கும் நாம் ISO 9001-2008 மாதிரியை பயன்படுத்துகினே்றோம் .

மு.ப.நி தர முகாமைத்துவ முறைமையானது இலங்கை தராதரங்கள் நிறுவனத்தினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்கின்றது. மு.ப.நி முகாமைத்துவ முறைமையின் நான்கு பிரதான கூறுகளான கல்விசார் நிறுவாகம் மற்றும் நிதி பிரிவுகள், நூலகம் மற்றும் தகவல் தொழல்நுட்ப நிலையம் என்பவற்றினால் ஏற்றுககொள்ளப்பட்ட உள்ளக முறைமைகள் தொழில்வாண்மைநிறுவகமொன்று சிறந்த நடைமுறைகள் , கடுமையான தராதரங்களை பின்பற்றியதாக இருகக்வேண்டுமென்பதை உறுதிப்படுத்தகின்றது. நிறுவகத்தின் செயன்முறைகளில் பிரயோகிக்கப்படுகின்ற தராதரம் அதன் தரத்தின் மீது நேரடி தாக்கத்தை கொண்டிருக்கின்றன. அது தொடர் மேம்பாடு மற்றும் வாடிக்கையாளர் திருப்தி என்பவற்றை வலியுறுத்துகின்றது. இலங்கையில் பல்கலைக்கழக முறைமையில் ISO 9001:2008 சான்றுப்படுத்துகையை வென்ற ஒரே ஒரு நிறுவனமாக மு.ப.நி திகழ்கின்றது.

## 3. பணிப்பாளரின் மீளாய்வு

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் உயர் மட்டத்தில் முகாமைத்துவ கல்வி தொடர்பாக நாட்டில் சிறியளவான கவனம்செலுத்தப்பட்ட பின்னணியில் மு.ப.நி அதன் ஆரம்ப பணிப்பாளரின் தலைமையில் பட்டப்பின்படிப்பு கற்கைகள் பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டத்தினூடாக இலங்கைக்கான முகாமையாளர்களை விருத்திசெய்கின்ற தேசிய பணிக்கு காலடியெழுடுத்து வைத்தது. இப்பின்னணியில் ஆரம்ப பணிப்பாளர் இலங்கையில் எம்பீஏ பட்ட பாடநெறியான்றை தாபிப்பதற்கான உதவியை பெற்றுக்கொள்வதற்காக கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். 1980 களின் ஆரம்பத்தில் நாட்டில் தனியுரிமை சந்தைவாய்ப்பு அப்போது உருவாக்கப்பட்டபோதிலும் தற்போது

சுமார் 35 வருடங்களின் பின்னர் எம்பீஏ இற்கான சந்தை மிகவும் போட்டித்தன்மை கொண்டதாகவும் உள்ளது.

நாட்டிலுள்ள எட்டு பல்கலைக்கழங்கள் எம்பீஏ பட்டத்தை வழங்கும் அதேவேளை ஒரு தொகை தனியார், கடல்கடந்த பாடநெறிகளும் மு.ப.நி போட்டிபோடுகின்றன. இந்த பிந்திய பாடநெறிகள் வெளிநாட்டு நிதிகளை பயன்படுத்தி வெகுவாக விளப்பரப்படுத்தப்படுவதோடு அவை எம்பீஏ பாடநெறிகளுக்காக மு.ப.நி. அறவிடுகின்றதைப் போல இருமடங்கு மிகை கட்டணங்களை அறவிடுகின்றன. போட்டித்தன்மையானது நுழைவு தகைமைகளை குறைத்தல், வருகைதரு விரிவுரைகளுக்கு உள்ளூர் பல்கலைக்கழக பீடத்தை பயன்படுத்துதல், இவர்கள் கூறுகின்ற 'சிறப்புமிகு" பெயர்கள், குறிப்பாக எமது சுயமானதை விட வெளிநாட்டிலிருந்து வரும் எந்தவொன்றும் மேலானது என்ற அவர்களது தங்கியிருக்கும் சிந்தனை நம்பிக்கையிலாகும் போன்ற விடயங்களிலிருந்தே போட்டித்தன்மை எழுகின்றது. மேற்படி நிலைமையானது தனது சுய நிதியில் இயங்குகின்ற மு.ப.நி. பாரிய சவாலொன்றை முன்வைக்கின்றது. போட்டித்தன்மைகொண்ட தனியார் கல்வி நிறுவனங்கள் மு.ப.நி . முகங்கொடுக்கின்ற வரையறைகளுக்கு உட்படுவதில்லை. தன்னிறைவானதாக இருக்கவேண்டும் என்கின்ற அதன் சுய உந்துதலளிக்கப்பட்ட முன்னெடுப்பானது மு.ப.நி. சம்பளங்கள், மின்சார கட்டணங்கள், காப்புறுதி, வரிகள், வருகைதரு விரிவுரையாளர்கள், மற்றும் கட்டட பராமரிப்பு, கவனிப்பு, கருவி, வழங்கல்கள், போக்குவரத்து மற்றும் கணக்காய்வு கட்டணங்கள் போன்றவற்றிற்கான கொடுப்பனவுகளுக்காக நிதிகளை உழைக்க வேண்டியிருக்கின்றது. இது இலங்கையில் ஒரு பொதுத்துறைசார் நிறுவனமொன்று அதன் நடைமுறை மற்றும் மூலதன செலவினங்கள் அனைத்தையும் உள்ளடக்கி உழைப்பதற்கு துணிந்து நிறுவனத்தை மிகைநிலையுடன் பேணிவருவது உண்மையிலேயே ஒரு தனித்துவமான நிலையாகும்.

இவ்வாண்டுக் காலப்பிரிவில் மு.ப.நி. 2014 -2018 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டாண்மை திட்டத்தின் அடிப்படையில் முகாமைத்துவ சபை மற்றும் கற்கை சபையினால் நன்கு வழிநடாத்தப்பட்டு, பணிப்புறுத்தப்பட்டிருக்கின்றது. (1) பட்டப்பின்படிப்பு கல்வி (2) ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் (3) பயிற்சி மற்றும் உசாவுகை சேவைகள், (4) புதிய கல்விச் சூழல் மேம்பாடு (5) நிர்வாக மற்றும் நிதி வினைத்திறன் போன்ற பிரதான பெறுபேற்று துறைகளில் முழுதுமளாவிய செயலாற்றுகை ஊக்கமளிப்பதாயிருப்பதை நான் மகிழ்வுடன் தெரிவிக்கவிரும்புகிறேன். அடுத்த சில பக்கங்கள் இவ்வாண்டுக் காலப்பகுதியில் மு.ப.நி அடைவுகளை தெளிவுபடுத்துவுதாக அமைகின்றது. இதைத்தொடர்ந்து

மனித வளங்கள் அபிவிருத்தி, நிர்வாக மற்றும் நிதி வினைத்திறன் தொடர்பான பிரிவுகள் வருகின்றன.

இலங்கையில் பொது முயற்சியான்மைகளின் எதிர்காலமானது மிக அநேகமாக சுயாதீனம் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றுக்கிடையே ஒரு சரியான சமநிலைய பேணுவதிலேயே தங்கியிருக்கின்றது. நாடு ஒரு வகையில் பொது முயற்சியான்மை பொறுப்புகளில் சுய நிதியிட்ட, சுயமாக முகாமைசெய்யப்படும் சுயமான ஒழுங்குறுத்தப்பட்ட மரபை வேண்டியிருப்பதோடு மறுபுறத்தில் வினைத்திறன், வகைகூறுதகைமை மற்றும் சிறந்த சேவை போன்ற சில ஆகக்குறைந்த தராதரங்களை நிறைவேற்றுவதற்கு பல்வேறு தொழில்முயற்சிகளும் உறுதிப்படுத்துகின்றன.

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சுயாதீனத்தன்மையானது நிருவாக, நிதி மற்றும் தொழிற்பாட்டு சுதந்திரத்திற்கு ஏற்பாடுசெய்கின்ற சட்டத்தின் இயலுமைத்தன்மையிலாகும். மேலும்மு.ப.நி. பொதுதிறைசேரியிலிருந்து எந்தவொரு வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டிலோ அல்லது புதிய கட்டிடங்களின் நிர்மாணத்தை உள்ளடக்குகின்ற அதன் மூலதன செலவினத்திற்கோ தங்கியிருப்பதில்லை.

அண்மைய வருடங்களில் இலங்கையில் உயர் கற்றல் நிறுவனங்களின் ஒரு பரப்புகை இருந்துவருகின்றது. எவ்வாறாயினும் சுயநிதியிடுகின்ற நிறுவனங்களுக்கும் அதன் செயற்பாட்டில் திறைசேரி கொடைகள் மீது கணிசமான அளவு தங்கியிருக்கின்ற அரச பல்கலைக்கழகங்கள் என்பவற்றுக்குமிடையே ஒரு வேறுபாடு செய்யப்படவேண்டியிருக்கின்றது. பாடநெறிகளின் தன்மை, மரபுரீதியற்ற பாடநெறி முன்மைப்பு, குழு, இடைத்தொடர்பு கற்றல் அமர்வுகள், முறைசார் விரிவுரையாளர்களுக்கு மேலதிகமாக கற்றல் வசதியளிப்பாளர்களின் பிரசன்னம் வாடிக்கையாளர்களின் தேவை மதிப்பீட்டு அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவவை மு.ப.நிறுவகத்தை அதன் ஏனைய இணை நிறுவனங்களிலிருந்து கட்டமைப்பு ரீதியாக வேறுபடுத்திக்காட்டுகின்றது. மு.ப.நி மைய நொக்கு யாதெனில் பொது மற்றும் தனியார் துறை செயற்பாட்டாளர்களை தொழில்வாண்மையாளர்களாக மாற்றுவதாகும். வேலைப்பளுமிக்க பொதுத்துறை அலுவலர்களும் தனியார் துறை ஊழியர்களும் தமது சாதாரண அலுவலக நேரத்தின் பின்னர் கற்பதற்கான வாய்ப்புகளை பெறுகின்றனர். அது பதவியினருக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கு வழிவகுக்கின்றது. மு.ப.நி கீர்த்திக்கான அதன் நன்கு வடிவமைக்கப்பட்ட பிரபல்யத்தை பேணி வருகின்றது என்பது பாராட்டத்தக்கது.

தனியார் தொழில்முயற்சிகளைப்பொறுத்தவரயில் இலாபத்தன்மை வினைத்திறனுக்கான பிரதான சுட்யாகவுள்ளது. அரசாங்க தொழில்முயற்சிகளைப்பொறுத்தவரையில் இலாபத்தன்மை போதிய சுட்டியாக

இல்லை அத்தகைய பல தொழில்முயற்சிகள் இலாபங்களை ஊச்சப்படுத்த உருவாக்கப்படவில்லை அலை இலாபமீட்டாத தொழிற்பாடுகளையே நிறைவேற்றுகின்றன. எவ்வாறாயினும் அரச உடமையான நிறுவனமொன்று திறைசேரி மீது பளுவில்லாமல் தொழிற்படுகின்றபோது அத்தகைய செயற்பாடு ஊக்குவிக்கப்படவேண்டும் என்பதே எமது கண்ணோட்டமாகும். செயலாற்றுகை அடிப்படையிலான கணக்காய்வு மட்டுமே மு..ப.நி. அதன் தொழிற்பாட்டு செயலாற்றுகை மற்றும் சேவைகளின் வழங்கலை மேம்படுத்துவதற்கு ஊக்குவிக்கும்.

நெகிழ்ச்சித்தன்மையை பேணும்வகையில் வேறுபட்ட தொழில்முயற்சி வகைகளின் கணக்கை செய்வதற்கான உருவாக்குதல், முகாமைசெய்தல், மேற்பார்வைசெய்தல், நடத்துதல் என்பவற்றுக்கான தகுதிறன் ஒன்று எமக்கு தேவைப்படுகின்றது. விளைவாக, பாரிய அளவிலான தொழில்முயற்சிகள் அவற்றின் சுயமான நிதியடல், அறிக்கையிடல் தனியார் மற்றும் ஆளுகை ஏற்பாடுகளுடன் இருத்தல் வேண்டும்.

நிதிசார் சுயாதீனத்தன்மை இன்மை, மனித வளங்களின் கட்டுப்பாடு என்பன மு.ப.நி . நீண்டகால அபிவிருத்தி, சந்தை மயமாக்கம் மற்றும் செயலாற்றுகை மேம்பாடு என்பவற்றை வெகுவாக பாதிக்கும். மு.ப.நி பொறுத்தவரை அதன் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை அடைவதற்கு மு.ப.நி முகாமைத்துவ சபை ஓரளவுக்கு நிதிசார் சுயாதீனத்தன்மையை பெற்றிருத்தல் வேண்டும்.

## 4. அடைவுகள் : பட்டப்பின்படிப்பு கல்வி

**இவ்வாண்டுக் காலப்பகுதியில் பட்டப்பின்படிப்பு வெளியீடுகள்.**

கல்விசார் நிகழ்ச்சிகள் வெற்றிகரமாகவும் உரிய நேரத்திலும் நடாத்தப்பட்டன. இவ்வாண்டுக் காலப்பகுதியில் முதுமாணிப்பட்டம், பட்டப்பின்படிப்பு டிப்ளோமா தேவைப்பாடுகளை பூர்த்திசெய்த பட்டப்பின்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை அட்டவணை 1 இல் தரப்படுகின்றது.

அட்டவணை 1 : 2014 இல் பட்டப்பின்படிப்பு பெறுபேறுகள்

| நிகழ்ச்சித்திட்டம் | எண். |
|---|---|
| வியாபார நிருவாகத்தில் கலாநிதிப்பட்டம் | 01 |
| வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம் | 326 |
| மனித வள முகாமைத்துவத்தில் எம்பீஏ பட்டம் | 01 |

| | |
|---|---|
| பொது நிருவாகத்தில் முதுமாணிப்பட்டம் | 91 |
| சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருள் வசதியளிப்பு துறையில் எம்பீஏ பட்டம் | 22 |
| e-ஆளுகையில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | 62 |
| வியாபார நிருவாகத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | 03 |
| முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | 04 |
| **மொத்த பட்டதாரிகளின் எண்ணிக்கை** | 510 |

**மூலம்:** மு.ப.நி. தரவுத்தளம்.

**இவ்வாண்டுக் காலப்பகுதியில் மாணவர் அனுமதிகள்**

2014 ஆண்டுக்காலப்பகுதியில் முதுமாணிப்பட்ட பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அட்டவணை 2 இல் தரப்படுகின்றது.

**அட்டவணை 2: 2013 இல் மாணவர் அனுமதிகள்**

| பாடநெறி | எண். |
|---|---|
| வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம்<br>தத்துவ கலாநிதிப் பட்டம் | 251<br>17 |
| மொத்தம் | 268 |

**மூலம்:** மு.ப.நி. தரவுத்தளம்.

**பாடநெறி திட்டமிடலும் முன்வைப்பும்**

***அ),*** இவ்வாண்டுக் காலப்பகுதியில் எம்பீஏ பாடநெறி, அதேபோல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிகளின் தரத்தையும் பொருத்தப்பாட்டையும் மேம்படுத்துவதற்காக புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போட்டித்

தன்மையில் முன்னணியில் இருப்பதற்காக மாணவர் பாடநெறி பாடவிதானங்களுக்கு பெறுமானத்தையும் வழங்கி வளர்ந்துவரும் போக்குகள் புதிய அறிவுத்துறைகளின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டன. மேலும் இவ்வாண்டுக் காலப்பிரிவில பின்வரும் மாற்றங்கள் **அறிமுகப்படுத்தப்பட்டு, பிரபல்யப்படுத்தப்பட்டன.** ***பாடநெறி விபரங்களை மீள்வடிவமைத்தல்:*** பாடநெறிகள் கவனத்தையும் வழிகாட்டலையும் கூர்மைப்படுத்துவதற்காக மீள்வடிவமைக்கப்பட்டன. விரிவான, தெளிவான கட்டமைக்கப்பட்ட பாடநெறியுடன் கட்டாய வாசிப்புகளின் பட்டியலிடல் பாடநெறி தயார்நிலை மற்றும் முன்வைப்பு தொடர்பில் விரிவுரையாளருக்கும் குறிப்பிட்ட அமர்வொன்றுக்கு முன்னதாகவே தயாரிப்பதற்கு பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கு முடியுமாக இருப்பதற்கும் ஏற்றவகையில் உதவியளித்துள்ளது.

ஆ). ***முன்வைப்பு முறை:*** இரண்டு குறிப்பான மாற்றங்கள் இடம்பெற்றன. முதலாவதாக மூன்று மணித்தியாள அமர்வின் மூன்றில் ஒரு பகுதி நேரடி விரிவுரை அலகுக்கூறிற்கு வழமையாக ஒதுக்கப்படுகின்றது. அதாவது தெரிவித்தல். அமர்வின் அடுத்த பகுதி காண்பித்தலுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது (அதாவது வீடியோ) கேட்டல் ( கலந்துரையாடல் / விவாதம்) செய்கை (பயிற்சி அல்லது விடய ஆய்வு). பீடமானது மாணவ முகாமையாளர்கள் தொடர்பான சாதகமான தாக்கமொன்றை உருவாக்குவதற்கு அனைத்து நான்கு வழிகளையும் பயன்படுத்துவதற்கான தேவையை அறிந்துள்ளதோடு தேவையான கற்றல் பெறுபேறு அடைவதற்கான தேவையை அறிந்துள்ளது.

இ). ***சிறப்பு விரிவுரைகள்:*** தெரிவுசெய்யப்பட்ட தலைப்புகளில் சிறப்பு விரிவுரைகளை ஆற்றுவதற்காக கைத்தொழிலிருந்து பிரதான பிரமுகர்களின் பாரிய ஈடுபாடு உள்ளது. இந்த அமர்வுகள் முன்திட்டமிடப்பட்டவையாக இருப்பதோடு பாடநெறி கட்டமைப்பில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த சிறப்பு விரிவுரைகள் பயன்மிக்கவையாக இருந்ததோடு அவைகள் உண்மையிலேயே மு.ப.நி எம்பீஏ பட்டத்திற்கும் அதன் போட்டியாளர்களுக்குமிடையே வேறுபட்ட அனுகுமுறையொன்றையும் உருவாக்கியுள்ளன.

**ஈ) புள்ளிகளை வெளியிடுதல் :** பீடம் உரிய நேரத்தில் புள்ளிகளை வெளியிடுவதற்கு கடைசித் திகதியொன்றை அமைத்திருக்கின்றது - இது இறுதி பரீட்சை திகதியிலிருந்து 4 வாரங்களாகும். இது கவனமாக பின்பற்றப்பட்டு வருவதோடு இது பீடத்தின் உள்ளடக்கி இருக்கின்றது.

**உ) மாணவர் மதிப்பீடு :** ஒரு பாடநெறி குறித்து மாணவரின் கண்ணோட்டம் பற்றிய முக்கிமானதொரு மதிப்பீடு இதுவாகும். மாணவர்களின் தவணை முடிவு

மதிப்பீடானது சுருக்கமாக தயாரிக்கப்பட்டு மாணவ முகாமையாளர்களின் கண்ணோட்டத்தின் படி சம்பந்தப்பட்ட பீட அங்கத்தவர்கள் அவர்களது செயலாற்றுகை குறித்து அறிவிக்கப்படுகின்றனர். 1 - 5 அளவொன்றில் 4 இன் முழுதுமளாவிய மதிப்பீடு ஒவ்வொரு பீட உறுப்பினர்களிடமிருந்தும் தேவைப்படுத்துகின்றது.

**ஊ) வதிவிட செலமர்வுகள் :** - பாடநெறி வழங்கலின் முக்கிய சிறப்பம்சமொன்றாக வதிவிட செலமர்வுகள் காணப்படுகின்றன. அவை வழமையாக கொழும்பிலிருந்து வெளியிடங்களிளேயே இடம்பெறுகின்றன. இவ்வாண்டுக்காலப்பகுதியில் முதுமாணி மற்றும் பட்டப்பின்படிப்பு மாணவர்களின் நலன்கருதி அத்தகைய இரண்டு செயலமர்வுகள் இடம்பெற்றன. மாணவர்களிடையே படைப்பாற்றலையும் நட்புறவையும் ஊக்குவிக்கத்தக்க அமைதியான சூழலொன்றில் தெரிவுசெய்யப்பட்ட விடயங்கள் தொடர்பில் நோக்குரீதியில் அவை மாணவர்களுக்கும் பீடத்திற்கும் உதவியளித்தன.

# 5 ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்

முகாமைத்துவத்தில் ஆராய்ச்சி என்பது இலங்கையில் இன்னும் ஆரம்ப மட்டத்திலேயே உள்ளது. நாம் இத்துறையில் ஒரு ஆராய்ச்சி மரபை விருத்திசெய்யவில்லை. எமது பிரதான ஆராய்ச்சி முயற்சிகள் கருத்தியலொன்றை வடிவமைப்பதற்கான சவால் வழிகாட்டப்படவேண்டும். நாம் கருதுவதுபோல் ஆராய்ச்சின் பிரதான நோக்கம் யாதெனில் முகாமைத்துவத்தை தொழிலொன்றாக வளப்படுத்துவதற்கான சுதேச கருப்பொருளொன்றின் தேடலாகும். இந்த நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மட்டங்களுக்கு தரமுயர்த்தக்கூடியதாக ஆராய்ச்சி வெளியீடுகளின் எத்தரதினூடாக ஆராய்ச்சிக்கான முறைமைகளையும் தர்க்கரீதியான அனுகுகைகளையும் நாம் நாடுகின்றோம்.

2014 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 200 மேற்பட்ட மாணவர் ஆராய்ச்சி கருத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டதோடு அவை மு.ப.நி. நூலகத்தில் வன்தட்டு வடிவத்தில் காணப்படுகின்றன.

## வெளியீடுகள்

மீளாய்வின் கீழான காலப்பிரிவில் வெளீட்டுத் துறையில் திருப்திகரமான முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது.

i). *மு.ப.நி முன்வைப்பு வழிகாட்டல்கள்.* மு.ப.நி பதவியினர் மற்றும் மாணவர்களினால் எழுத்து மற்றும் முன்வைப்பு பொருட்களின் ஒருமைத்தன்மையையும் மேம்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட மு.ப.நி முன்வைப்பு வழிகாட்டல்கள் என பெயரிடப்பட்ட கைநூலொன்று வெளியிடப்பட்டுள்ளது. நூலானது இணக்கப்பாட்டுக்கான விதிகள் மற்றும் வழிகாட்டல்களின் தொகுதியொன்றை வழங்குவதோடு அமெரிக்க உளவியல் சங்கத்தின் கைநூலில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களின் அடிப்படையிலேயே பொதுவாக உள்ளது. பீடம் வெளியீட்டின் தொகுப்பிற்கும் பங்களிப்புச்செய்திருக்கின்றது.

ii) **இலங்கை முகாமைத்துவ சஞ்சிகை (இ.*மு.ச)*** : 1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவகத்தின் காலாண்டு சஞ்சிகையான ***இலங்கை முகாமைத்துவ சஞ்சிகை (இ.மு.ச)*** வெளியீடு, கலந்துரையாடலுக்கான மன்றமொன்றை தொடர்ந்தும் வழங்கிவருக்கின்றது. இ.மு.ச. இரண்டு மேலதிக வெளியீடுகள் 2014 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டன. இ.மு.ச. பிரதான நோக்கம் முகாமைத்துவத்துவத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஊடகமொன்றை வழங்குவதும் பீடத்தினதும் மாணவர்களினதும் சிறந்த ஆராய்ச்சி பெறுபேறுகளை பரப்புவதுமாகும். இத்துறைகளில் இருப்போர் வெளியீட்டுக்கு தமது பங்களிப்புகளை அனுப்பிவைக்கும்படியும் அழைப்பு விடுக்கப்படுகின்றனர்.

iii) *தொழில்சார் முகாமையாளர்,* இரு வருடத்திற்கு ஒரு முறை வெளியிடப்படுகின்ற சஞ்சிகையானது இ.மு.சஞ்சிகைக்கு மேலதிகமாக நவீன முகாமையாளர்களின் வளர்ந்துவரும் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டதாகும். இது குறிப்பான தொழிற்பாட்டு சார்பின்றி விளங்குவதற்கு இலகுவான அமைப்பொன்றில் முன்னேற்றகரமான முகாமைத்துவ அறிவை பரப்புகின்றது. இன்றைய சிக்கலான, குழப்பகரமான சூழ்நிலையில் பணியாற்றுகின்ற நவீன முகாமையாளருக்கு சமகால, முக்கியத்துவமிக்க விடயங்கள் ***தொழில்சார் முகாமையாளர்,*** சஞ்சிகையில் வலியுறுத்தல் வழங்கப்பட்டிருக்கின்றது. 2014 ஆம் ஆண்டில் இரண்டு இதழ்கள் அச்சிடப்பட்டுள்ளன.

iv) **மீளாய்வின் கீழான ஆண்டில் பீடத்தினாலும் மாணவர்களினாலும் உள்ளூர் ஊடகங்களில் 36 கட்டுரைகள் வெளியிடப்பட்டன.**

அட்டவணை 3: ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள்

| விடயம் | வெளியிடப்பட்டது | வர்த்தகமயப்பட்டது | சமர்ப்பிக்கப்பட்டது |
|---|---|---|---|
| அ. எம்பீஏ மாணவர்களது ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | -- | -- | 192 |
| ஆ. பருவகால சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 02 | 02 | |
| இ. சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 02 | 02 | |
| ஈ.புத்தகங்களின் எண்ணிக்கை | 02 | 02 | |
| உ. கட்டுரைகளின் எண்ணிக்கை (செய்திப் பத்திரிகை) | 42 | (தினசரி வெளியீடுகளில் வெளிவந்தவை) | |
| மொத்தம் | 48 | 06 | 192 |

**மூலம்:** *முு.ப.நி. தரவுத்தளம்.*

முு.ப.நி. **ஆராய்ச்சி தினம்.**

முதலாவது மு.ப.நி வருடாந்த ஆராய்ச்சி தினம் 2014 நவொம்பர் 28 ஆம் திகதியன்று இடம்பெற்றது. பல்கலைக்கழகங்கள் மாணியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சானிகா ஹிரிபுரேகம பிரதம அதீதியாக இதில் பங்கேற்றார்.

மாணவர்கள், கல்வியலர்கள், ஆராய்ச்சியாளர்கள் பொதுத்தொடர்பு எலவிற்பனையாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோர் உள்ளிட்ட பெரும் அளவிளான வாசகர்களுக்கு நன்மையளிப்பதற்கு ஏற்றதாக எமது

ஆராய்ச்சிகளை காட்சிப்படுத்துகின்ற இந்த கோட்பாட்டை மு.ப.நி. முன்னெடுத்தது. மு.ப.நி உபாயமுறை திசைநோக்குடன் இயைந்ததாக முகாமைத்துவ ஆராய்ச்சி முக்கிய வகிபாகமொன்றை செய்கின்றது. உண்மையில் எமது கட்டமைப்பு கீர்த்தியின் பிரதான தூணொன்றாக அது இருக்கின்றது. இது எம்மை தெற்காசியாவில் முகாமைத்துவ கீர்த்தியின் மத்திய நிலையமொன்றாக மாற்றும். மு.ப.நிறுவகத்திற்கும் அவுஸ்திரேலியாவின் நிவ் சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்திற்கும் இடையே ஆராய்ச்சி பங்காண்மையுடன் ஆரம்பித்ததுடன் எமது ஆராய்ச்சி முயற்சிகளில் மிகவும் உயிரோட்டமானதாக இருப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

## 6. பயிற்சி மற்றும் உசாவுகை சேவைகள்

மு.ப.நி. ஆனது வியாபார சமூகத்தின் தொழிற்பாட்டு பங்காளர் ஒருவராக இருப்பதற்கான அதன் முயற்சியில் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வாடிக்கையாளர் மயப்படுத்தப்பட்ட பயிற்சிகளை வழங்குவதில் பெருமையடைகின்றது. வாடிக்கையாளர்கள் என்போர் வங்கியில், நிதி மற்றும் காப்புறுதி போன்ற துறைகளில் உற்பத்தி மற்றும் சேவைகளில் ஈடுபட்டுள்ள பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்குகின்றது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் அத்தகைய ஒன்பது குறுங்கால மற்றும் நடுத்தர கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அட்டவணை 4 இல் விபரிக்கப்பட்டவாறு ஏழு நிறுவனங்களுக்கு நடாத்தப்பட்டன.

**அட்டவணை 4: 2014 இல் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| | நிறுவனம் | நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|---|
| 1 | வ/ப ஹொல்சிம் லங்கா நிறுவனம் | கம்பனியின் நடுத்தர முகாமைத்துவத்திற்கான முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |
| 2 | சுகாதார அமைச்சு | மருத்துவ அலுவலர்களுக்கான முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |
| 3 | பீபல்ஸ் லீசிங் என்ட் பினேன்ஸ் பிஎல்சி | உயர் தர கிளை முகாமையாளர்களுக்கான |

| | | |
|---|---|---|
| | | முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |
| 4 | ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் | சிரேட்ட முகாமைத்துவத்திற்கான தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் |
| 5 | தேசிய சேமிப்பு வங்கி | உதவிப் பொது முகாமையாளர்களுக்கான முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |
| 6 | ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி | சிரேட்ட முகாமைத்துவத்திற்கான முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |
| 7 | சென்றல் பினேன்ஸ் பிஎல்சி | கம்பனியின் கிளை முகாமையாளர்களுக்கான முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |
| 8 | வ/ப அமேசன் ரேடிங் (தனி) நிறுவனம் | வியாபார ஆங்கிலம் மற்றும் தொழில்சார் தொடர்பாடல் பாடநெறி |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

கொள்கை ரீதியில் மு.ப.நி. நடைமுறைசார் முகாமைத்துவ பிரச்சினைகளை வெளிக்கொணர்வதனூடாக பீட கற்பித்தலின் உள்ளடக்கத்தையும் திறனையும் மேம்படுத்துவதில் பங்களிப்புச்செய்வதற்காக முகாமைத்துவ உசாவுகை ஒப்படைகளை பொறுப்பேற்கின்றது. 2014 ஆம் ஆண்டில் கூட்டாண்மை திட்டமிடல், நிறுவனரீதியான மீள்கட்டமைப்பு, தொழில் பகுப்பாய்வு, சம்பளக் கொள்கை, பயிற்சியும் அபிவிருத்தியும் மற்றும் நிறுவன ரீதியான அபிவிருத்தி போன்ற துறைகளில் பல முகாமைத்துவ உசாவுகைகள் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டன.

# 7. கல்விசார் மற்றும் பௌதீக சுற்றாடல் மேம்பாடு

கீழே காட்டப்பட்டவாறு மீளாய்வின் கீழான ஆண்டில் தொடராக கல்வி மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக்கு கணிசமான கவனம் செலுத்தப்படவேண்டிய தேவையை மு.ப.நி. முற்றாக உணர்ந்துள்ளது.

### வருடாந்த பீட விருந்துபசாரம்

நிறுவகத்தின் வருடாந்த பீட விருந்துபசாரம் *சிலாபம், அனத்ய* ஹோட்டலில் இடம்பெற்றது. அதன் பிரதான நோக்கம் - நிறுவகத்திற்கான சமகால மற்றும் எதிர்கால தேவைகளை பூர்த்திசெய்து அதை பயனுறுதிமிக்க மேம்பாடுகள் மற்றும் மீள்நிலைப்படுத்தல் நோக்குடன் அதன் அனைத்து பிரதான பணிகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் நிறுவகத்தின் அந்தஸ்தை எடுத்துக் காட்டுவதும் பாரிய வெற்றியை அடைவதும் அதன் பிரதான நோக்கமாகும். உண்மையில் ஒரு பயன்மிக்க பீட விருந்துபசாரம் கல்விச் சமூகத்தில் புதிய உயிரோட்டமாக வாழ்க்கையை சுவாசிக்கச்செய்யும் என்பதோடு விருந்துபசாரத்தின் சிறந்த ஒழுங்குபடுத்தப்பட்ட உள்ளடக்கம் நிறுவகத்தின் அடையாளாத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் என்பதோடு பகிர்ந்துகொண்ட உணர்வை பிரதிபலித்து முன்னோக்கிச் செல்லமுடியும். இந்த நோக்கங்கள் இவ்வருட வருடாந்த பீட விருந்துபசாரத்தில் அநேகமான அடையப்பெற்றன.

### அபிவிருத்திக்கான *5 M* சட்டகம்

எதிர்வரும் வருடங்களில் மு.ப.நி முன்னோக்கி எடுத்துச்செல்வதற்காக வேண்டி ஏற்கெனவே பின்பற்றப்பட்ட ஐந்துமுக நிகழ்ச்சித்திட்டம் பாரிய உந்துதலுடன் தொடர்ந்தது. அது சந்தை, அங்கத்தவர்கள் (பீடம் பதவியினர்) வழிகாட்டுநர் (தனிப்பட்ட உதவி, வழிகாட்டல் மற்றும் பின்னூட்டல் வழங்குவதற்கு குறித்துரைக்கப்பட்ட பீடம்) கண்காணிப்பாளர்கள், (ஒவ்வொரு தொகுதிக்குமான வகுப்பு பிரதிநிதிகளின் நியமனம்) மற்றும் எம்பீஏ (மு.ப.நி பழைய மாணவர் அமைப்புடன் இயங்குதல்) ஆகிய 5 எம் குறியீடுகளுடன் தொடர்புபட்டதாக உள்ளது. பீட கூட்டங்கள் ஏனைய பங்காளர்களின் பங்கேற்புடன் ஏற்பாடுசெய்யப்பட்ட கூட்டங்கள் ஆகியவற்றில் முன்வைப்புக்ள் ஊடாக இந்த பங்காளர்களுடன் பணிபுரிவதற்கு வலியுறுத்தல் வழங்கப்பட்டது.

### மு.ப.நி இற்கான ISO 9001-2008 அந்தஸ்து

2012 ஆம் ஆண்டில் ISO 9001-2008 சான்றுப்படுத்துகையை பெற்றுக்கொண்டமை எமது வரலாற்றில் பெற்றுகொண்ட மிகப்பெரும் அடைவுகளில் ஒன்றாகும். இச்சான்றிதழை இன்றுவரை இலங்கையிலுள்ள பல்கலைகழக முறைமையினுள்

பெற்றுக்கொண்ட ஒரே ஒரு உயர் கல்வி நிறுவகமாக மு.ப.நி. திகழ்கின்றது. சான்றிதழ்பெறுவதற்கு இட்டுச்சென்ற முறைமை மிகவும் பயனுடையதாக இருப்பதோடு கற்றல், கற்பித்தல், மதிப்பீடு மற்றும் கல்விசார், நிருவாக, நிதி நிருவாகம் என்பவற்றை உள்ளடக்கி கல்விசார் துறைகளில் தாக்கமிக்க மேம்பாட்டுக்கு காரணமாக அமைந்தது.

## நூலகத்தின் விரிவாக்கம்

நூலகத்தின் விரிவாக்கப் பணி 2014 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது (வீடியோ நூலகம் உள்ளிட்ட) இந்த நோக்கத்திற்காக ரூபா 2.5 மில்லியன் தொகையொன்று ஒதுக்கப்பட்டது. நூலகமானது அதிக பாவனையாளர்கள் மற்றும் வசதிகளை அதாவது ஆராய்ச்சி திரட்டல், தகவல் உதவி, நூலகங்களுக்கிடையிலான கடன், விடய உசாத்துணைகள், காட்சிப்பொருட்கள், இணைய தொடர்பு, வீடியோக்கள், தன்னியக்க பட்டியல் முறைமை போன்ற வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய துறைகளில் 32,000 புத்தகங்களும் 30 பருவ வெளியீடுகளும் சஞ்சிகைகளும் வாசகர்களுக்காக கிடைக்கத்தக்கதாக இருந்தது. வினைத்திறன்மிக்க சேவையை உறுதிப்படுத்துவதற்காக நூலக நவீனமயப்படுத்தலின் அங்கமொன்றாக பட்டை குறியிடப்பட்ட கணிப்பீட்டு முறைமையொன்று மேலும் மேம்படுத்தப்பட்டது.

## பதவியினருக்கும் மாணவர்களுக்குமான மேம்படுத்தப்பட்ட வசதிகள்

மாணவர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்கும் பொருட்டு இவ்வாண்டுக்காலப்பகுதியில் பின்வரும் மேம்படுத்தப்பட்ட வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன:

- **உடலியல் பயிற்சி நிலையம்** : நிறுவகத்தின் எம்பீஏ பாடநெறியை பின்பற்றுகின்ற அநேகமான மாணவர்கள் தொழில் –வாழ்க்கை –கற்றல் ஆகிய முக்கிய பகுதியில் சமநிலையை பேணமுடிவதில்லை. மு.ப.நி மாணவர்கள் உடலியல், உளவியல், சமூக மற்றும் ஆன்மீக ஆகிய நான்முக வாழ்க்கை தேவையை முகாமை செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். இந்த நோக்கத்தை அடைவதற்கு உதவுகின்ற உடலியல் பயிற்சி நிலையம் புதிய உபகரணங்களுடன் தரமுயர்த்தப்பட்டது.

- **இணைய தள அடிப்படையிலான மாணவர் முன்னேற்ற அறிக்கை முறைமை :** இந்த முறைமையானது எம்பீஏ மாணவர்களது நிகழ்ச்சித்திட்டத்தின்போது அவர்களது தனிப்பட்ட கல்விசார் செயலாற்றுகையை இற்றைப்படுத்துவதற்கும் ஒவ்வொரு பாடநெறியிலும் பெற்ற புள்ளிகள், பாடநெறி சராசரிகள், ஏனைய தொகுதியுடன் அவர்களது தர நிலைமை என்பவற்ற அறிந்துகொள்வதற்காக விருத்திசெய்யப்பட்டது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் இம்முறைமை மேலும் தரமுயர்த்தப்பட்டது.

- **மோட்டார் வாகன தரிப்பிடத்தின் விரிவாக்கம்:** மோட்டார் கார் வாகன தரிப்பிடம் அலுவலகத்தின பின்னர் மாலைநேர விரிவுரைகளை தொடரும் பட்டப்பின்படிப்பு மாணவர்களின் நலனுக்காக மேலும் வாகனங்களை உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது.
- **பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் வேலை:** மு.ப.நி கட்டிடம் வர்ணப்பூச்சு பூசப்பட்டு அனைத்து பகுதிகளிலும் பராமரிப்பு பணி தொடர்ந்தது. விரிவுரை அறைகளும் விரிவுரையாளர்களின் சிறு அறைகளும் தேவையான போது புதுப்பிக்கப்பட்டன. புதிய கதிரைகளும் மேசைகளும் மாணவர் கற்கை பகுதிகளிலும் விரிவுரை அறைகளுக்கும் வழங்கப்பட்டன. மேலும் விரிவுரை அறைகளில் காணப்பட்ட பழைய ஒலி முறைமை புதியவற்றினால் பதிலீடு செய்யப்பட்டன.

- **வருகையை பதிவதற்கான தன்னியக்கமயப்படுத்தப்பட்ட பட்டை குறியீட்டு முறைமையின் அறிமுகம்:** இது மாணவர்களின் வருகையின் கைவழி பதிவுக்கான தேவையை அகற்றியது. இது மாணவர் கற்றல் நுழைவாயில் ஊடாக அவர்களது நாளாந்த வருகை வீதத்தை பார்ப்பதற்கு ஏற்றவகையில் மேலும் மேம்படுத்தப்பட்டது.

- **இணைய சேவைகளின் அறிமுகம் :** பாட விடயங்களின் இணைய பதிவேற்றம், பீட அங்கத்தவர்களின் இணைய மாணவர் மதிப்பீடு, மாணவர்களின் பாடநெறி புள்ளிகளின் இணைய இற்றைப்படுத்தல், இவ்வாண்டுக் காலப்பகுதியிலும் தொடர்ந்து இடம்பெற்றது. மேலும் அவசர விடயங்கள் தொடர்பில் மாணவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான மொத்த குறுஞ்செய்தி முறைமையொன்று அறிகப்படுத்தப்பட்டது.

## மு.ப.நி. கட்டட கருத்திட்டம் – கட்டம் II

மு.ப.நி. கட்டட தொகுதியின் கட்டம் II இன் நிர்மாணத்திற்கான கருத்திட்ட பிரேரணையொன்று 2012 யூனில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட மொத்த கருத்திட்ட செலவு ரூபா 171 மில்லியன்களாகும். நிறுவகம் கருத்திட்டத்தை கிட்டிய எதிர்காலத்தில் ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ளதோடு நிருவத்தினால் உழைக்கப்படுகின்ற நிதி கட்டிடத்தின் கணிசமான பகுதியொன்றை பூர்த்திசெய்வதற்கு பயன்படுத்தப்படும். கட்டிட நிர்மாணத்தின் நிறைவின் பின்னர் நிறுவகம் மாணவர்களுக்கும் கூட்டாண்மை சமூகத்திற்கும் விரிவான மற்றும் விரிவான சேவைகளை வழங்கக்கூடியதாக இருக்கும்.

## விளம்பரமும் புகழுருவும்

பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஊடாக 2014ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மு.ப.நி செயற்பாடுகளையும் விளம்பரப்படுத்துவதற்கு உட்சாகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்தவகையில் மு.ப.நி நோக்கை அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முறையாக இற்றைப்படுத்தப்படுகின்ற மு.ப.நி இணையத்தளம் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட விசேட நிகழ்வுகளையும் உள்ளடக்கி இருக்கின்றது.

## m-கற்றல் வசதியின் அறிமுகம்

மு.ப.நி நேரடி விரிவுரை மென்பொருளை பயன்படுத்தி பாடநெறிகளை இணையம் மூலம் தொடருவதற்காக எம்பிஏ மாணவர்களுக்கு வசதியளிப்பதற்காக வரையறுக்கப்பட்ட மொபிடல் தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாட்த்திட்டது. இந்த நேரடி விரிவுரை அம்சம் நேரடி விரிவுரை மென்பொருளை பயன்படுத்தி இணையத்தில் விரிவுரைகளை வழங்குவதற்கு விரிவுரையாளருக்கு வாய்ப்பளிக்கின்றது. நேரடி விரிவுரை அம்சம் வீடியோ, பவர்பொய்ன்ட் முன்வைப்புகள் மற்றும் ஒலி போன்ற பல்லூடக முறைமைகளினூடாக அதேநேர விரிவுரைகளை மேற்கொள்ள வசதியளிக்கின்றது.

# 8. மனித வளங்கள் அபிவிருத்தி

இவ்வாண்டுக்காலப்பகுதியில் பீடமும் கல்விசாரா பதவியினரும் நிறுவனசார் இலக்குகளை அடைவதில் பாரிய சேவைகளை ஆற்றியிருந்தனர்.

## பீட மூலவளங்கள்

மூன்று தசாப்தங்களாக நிறுவகமானது முதியோர் கற்றல், ஆராய்ச்சி, மற்றும் உசாவுகையில் பெரும் அனுபத்தை திரட்டியுள்ளது. நிறுவகத்தின் இன்றுள்ள அநேகமான ஆசிரியர்கள் பல வருடங்களாக கடமைப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களாவர். இதன்மூலம் தராதரங்கள், வழமையாக உள்ளூரில் காணப்படுகின்ற அறிவை பாடவிதானத்தினுள் ஒன்றிணைத்தல் ஏனைய பீட அங்கத்தவர்களுடன் வேகமாகவும் நெகிழ்ச்சியுடனும் ஒருங்கிணைத்தல் போன்ற பண்புகளையுடைய பிரதான கல்வியாளர் குழுவாக இருக்கின்றனர். கற்பித்தல் பீடமானது பாடப்பரப்பு பணியை நடாத்துவதிலும் முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்ட மாணவர்களது ஆராய்ச்சி கட்டுரைகள் மற்றும் திறன் கருத்திட்டங்களை மேற்பார்வை செய்வதிலும் ஈடுபட்டிருந்தது.

அட்டவணை 5 : கல்விசார் பதவியினர்

| | சிரேட்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேட்ட விரிவுரையாளர் | உசாவுநர் | வருகைதரு உசாவுநர் |
|---|---|---|---|---|---|
| | - | 02 | - | 05 | 30 |
| மொத்தம் | - | 02 | - | 05 | 30 |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

## பீட மூலவளங்கள்

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக மு.ப.நி. முதியோர்கற்றல், ஆராய்ச்சி மற்றும் உசாவுகையில் பரந்த அனுபவமொன்றை தன்வசமாக்கியுள்ளது. நிறுவகத்தின் அநேகமான ஆசிரியர்கள் இன்றுவரை பல வருடங்களாக பணியில் ஈடுபட்டிருப்பதோடு தராதரங்களை வடிவமைத்து, வழமையான படவிதானத்தில் உள்ளூர் அறிவை ஒருங்கிணைத்தல் மற்றும் பீடத்தின் பல அங்கத்தவர்களிடையேயும் வேகத்தையும் வினைத்திறனையும் ஒழுங்கமைத்தல் என்பவற்றினூடாக அவர்கள்

முக்கிய கல்விசார் குழுவை அறைக்கின்றனர். பீட குழுவானது நிரந்தர ஆசிரியர்கள், ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்கள், வருகைதரு கல்வியலர்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்களையும் கொண்டுள்ளது.

**கலாநிதி அரோசா அதிகாரம்,** பீபீஏ (கொழு.), எம்.ஏ. (கொழு.), பீ.எச்.டீ. (கொழு.),
**திரு. இந்ரஜித் அபொன்சோ,** பீ.எஸ்.சீ. (கொழு.), எம்.ஏ. (கொழு.), எம்.பில்(ஹொங்கொங்)
**திரு. சிசிர அதுரலியகே,** பீ.எஸ்.சீ. இயற். விஞ்., (றுஹுணு), எம்.எஸ்.சீ. கணினி விஞ்., (கொழு.),
**கலாநிதி ரேசி கார்டே,** பீ.எஸ்.சீ. (ரைட் ஸ்டேட்), எம்.பீ.ஏ., பீஎச்.டீ. (ஜோர்ஜியா)
**திரு. அநுர தயானந்தா,** எம்பிசீஎஸ்(யூ.கே) எம்பீஏ(பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே),எம்எஸ்சீ)
**திருமதி கயானி த அல்விஸ்,** எம்சீஐஎல்ரீ . (யூ.கே) எம்பீஏ(பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே),எம்எஸ்சீ)
**கலாநிதி அஜந்த தர்மசிறி,** பீ.எஸ்.சீ. பொறி. (மொரட்டுவ), எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), பீஎச்.டீ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), சி.பொறி. எம்.ஐ.ஈ (இல)

**திருமதி சகுந்தலா துரைரட்ணம், ,பீஎஸ்;சீ (பேரா)** எம்.எஸ்.சீ ( யு.எஸ்ஜே) எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே)

**திரு. ரவி எதிரிசிங்க,** எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே), ஏ.சீ.எம்.ஏ. (யூ.கே.), எப்.எஸ்.சீ.எம்.ஏ.
**திரு. ஹர்ஷ பர்னாந்து,** எல்.எல்.எம். (லண்டன்), எம்.பீ.ஏ. (நான்யாங்), சட்டத்தரணி
**கலாநிதி லொய்ட் பர்னாந்து,** எம்.எஸ்.சீ. (மொஸ்கோ), பீஎச்.டீ (சசெக்ஸ்)
**திரு. மாரியோ பொன்சேகா,** எம்.சீ.ஐ.எம். (யூ.கே) எப்.எஸ்.சீ.எம்.ஏ., எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே)
**பேராசிரியர் திலக் பொன்சேகா,** பீ.ஏ. (இலங்), எல்.எல்.பீ. (கொழு.), எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), எம்.ஏ. (கொழு.), பீஎச்.டீ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), சட்டத்தரணி
**கலாநிதி பினலொப் ஹுட்,** டீ.எம்.எஸ். (ஈடீ), எம்.எஸ்.சீ (கல்வி முகா.), பீ.எச்.டீ.(ஆங்கிலியா)
**திரு. மபாஸ் இஸ்ஹாக்,** பீ.எஸ்.சீ. (பொறி), எம்.எஸ்.சீ. (பொரு.), எம்.எஸ்.சீ. (பொறி.), சீ.ஐ.எஸ்.ஏ.

திரு. சஞ்சீவ் ஜயரத்தினம், சீ.என்ஜி. எம்.பீ.சீ.எஸ்., பீ.எஸ்.சீ.(மான்செண்டர்), எம்பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே)

திரு. திஸ்ஸ ஜயதிலக்க, பீ.எ (கொழு.), எம்.ஏ. (வோக்), எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே)

கலாநிதி ஏ.கே.எல். ஜயவர்தன, பீ.ரெக். (சென்னை), எம்.பீஏ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), பீஎச்.டீ. (கென்பரா),

திரு. கே.ஏ.ஐ. கல்யாணரத்ன, பீ.ஏ. (இலங்), எம்.பீ.ஏ./எச்.ஆர்.எம். (பீ.ஐ.எம் – யு.எஸ்.ஜே.), ஏ.சீ.ஐ.ரீ. (யூ.கே.)

பேராசிரியர் உதித லியனகே, டிப். எம்., எப்.சீ.ஐ.எம்., எம்.பீஏ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), பீஎச்.டீ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.),

திரு. என். நிர்மலன், எம்.பீ.எம். (யு.எஸ்.கியு), பீ.எஸ்.சீ. (சிறப்பு) கொம். அன் ஐஎஸ். (எல்.ஜீ.யு.) எம்.சீ.எஸ். (இலங்கை)

பேராசிரியர் ஹோரத் ஒபாதா, பீ.எஸ்.சீ., (வியா.முகா) (யு.எஸ்.ஜே.), எம்.எஸ்.சீ., ம. வ.மு.( ஸ்ரீ ஜ.புர ப) , எம்.பீஏ (பேமிங்ஹம்) பீஎச்டி

கலாநிதி ட்ராவிஸ் பெரேரா, டிம்ஈடி (யூகே) எம்பீஏ, (மு.ப.நி – ஜ.ப), பீஎச்டி (மு.ப.நி – ஜ.ப),

திரு. வெலிங்டன் பியதாஸ, எப்.சீ.எம்.ஏ, எப்.பீ.எப்.ஏ., பி.ஜீ., டிப்.எம்.பீ. (யு.சீ.டீ.),

திரு கால்டன் சமரஜிவா, பீ.ஏ. (இலங்கை), பீ.ஈடீ, (குயீன்ஸ்), டிப். ஈடீ. (லண்டன்), டிப். ரீ.ஈ.எப்.எல்.(சிட்னி)

பேராசிரியார சதீஷ் சின்டே, எம்.எஸ்.சீ., பீ.எச்.டீ. (பூனே)

கலாநிதி அருள் சிவஞானந்தன், பீ.என்ஜி. (சிறப்பு) (லண்டன்), ஏ.எம்.ஐ.ஈ. (இலங்.), எப்.சீ.எம்.ஏ. (யு.கே.), எம்.பீ.ஏ. (கிரான்பீல்ட்), பீ.எச்.டீ. (யு.எஸ்.ஏ.)

கலாநிதி விக்கிரம வீரசூரிய, எல்.எல்.பீ. (பேராதெனிய), பீ.எச்.டீ. (லண்டன்), சட்டத்தரணி

திரு. சேனகா வீரசூரிய, பீ.எஸ்.சீ., (அனு.), எம்.ஐ.ரீ. (கென்பரா)

திரு. சுனில் விஜேசிங்க, எப்.சீ.எம்.ஏ., சி.என்ஜி., எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே)

## கல்விசாரா பதவியினர்

இவ்வாண்டுக்காலப்பகுதியில் நிறுவகம் 28 முழு நேர ஊழியர்களை கொண்டிருந்தது. துப்பரவு சேவைகள், சுகாதார பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் உணவக சேவைகள் வசதிகள் என்பன வெளிமூலங்களிலிருந்து பெறப்பட்டன.

**அட்டவணை 6. இல் கல்விசாரா பதவியினரின் விபரங்கள் தரப்படுகின்றன.**

அட்டவணை 6: **கல்விசாரா பதவியினரின் விபரங்கள்**

| **பீடம்/கிளை** | **மிகவும் சிரேட்ட** | **சிரேட்ட பதவியினர்** | **கனிஸ்ட பதவியினர்** | **சிற்றூழியர்கள்** |
|---|---|---|---|---|
| நிருவாகம் மற்றும் கல்வி விவகாரங்கள் | | 01 | 05 | 03 |
| த.தொ.நிலையம் | | 01 | | 01 |
| நூலகம் | | 01 | 04 | |
| பணிப்பாளர் அலுவலகம் | 01 | | 01 | |
| பயிற்சி மற்றும் வெளியீடுகள் | 01 | | 01 | |
| பொதுக்கொள்கைப் பிரிவு | 01 | 01 | 02 | |
| நிதி | 01 | | 03 | |
| | | 01 | 05 | 03 |
| மொத்தம் | 28 | | | |

**மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்**

# 9. நிருவாக மற்றும் நிதிசார் வினைத்திறன்

பின்வரும் கூற்றுக்கள் பிரதிபலிக்கின்றவாறு இது நிறுவகத்திற்கு நிருவாக மற்றும் நிதிசார் வினைத்திறன் துறைகளில் வெற்றிகரமானஆண்டாக இருந்திருக்கின்றது.

அட்டவணை 7 இல் ஒப்பீட்டு மீண்டெலும் செலவினம் காட்டப்படுகின்றது.

அட்டவணை 7: மீண்டெலும் செலவினம் : 2012(ரூ) 2013(ரூ) 2013 (ரூ)

| விடயம் | 2012 | | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| அ. ஆள்சார் செலவினங்கள் | 27,170,448 | | 34,743,448 | 37,450,350 |
| ஆ. போக்குவரத்து | 3,332,150 | | 2,367,507 | 1,263,175 |
| இ. வழங்கல்கள் | 7,509,525 | | 8,863,732 | 11,812,206 |
| ஈ. பராமரிப்பு | 3,181,931 | | 4,032,681 | 4,864,374 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 17,360,808 | | 18,952,907 | 25,263,530 |
| ஊ. ஏனையவை | 35,279,370 | | 40,261,864 | 23,947,168 |
| எ. கருத்திட்ட இயற்கை செலவினம் | 29,752,511 | | 20,775,283 | 33,689,780 |
| மொத்த செலவினம் | 123,566,788 | | 129,727,425 | 138,290,583 |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

**அட்டவணை 8 இல் ஒப்பீட்டு மூலதனச் செலவினம் காட்டப்படுகிறது.**

**அட்டவணை 8: மூலதனச் செலவினம்**

| விடயம் | 2012(ரூ) | 2013 (ரூ) | 2014 (ரூ) |
|---|---|---|---|
| அ. தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் கையகப்படுத்தல் | 4,535,905 | 4,885,334 | 6,147,596 |
| ஆ.பொறித்தொகுதிகள் கையகப்படுத்தல் | 5,676,652 | 5,676,652 | - |
| இ. கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் கையகப்படுத்தல் | - | - | - |
| ஈ. ஏனையவை (நூலக புத்தகங்கள், மோட்டார் வாகனம், பட்டமளிப்பு ஆடை) | 649,320 | 1,193,395 | 2,117,571 |
| உ. காணி மற்றும் கட்டிடங்களின் புனர்நிர்மாணம் மற்றும் புத்தாக்கம் | 282,373 | 393,400 | 2,660,542 |
| மொத்தம் | 11,144,250 | 6,472,129 | 10,925,709 |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

**அட்டவணை 9 இல் உள்ளூர் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் காட்டப்படுகின்றன.**

**அட்டவணை 9: கருத்திட்டங்கள் (உள்ளூர்)**

| பெயர் மற்றும் விபரங்கள் | கடன் / கொடை | நிதியளிப்பு முகவராண்மை | TCE ரூபா | RFA ரூபா | DF ரூ பா |
|---|---|---|---|---|---|
| மொத்தம் | | | | | |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

**அட்டவணை 10 இல் உள்ளூரில் நிதியளிக்கப்பட்ட கருத்திட்ட செலவினம் ஒப்பீட்டு ரீதியில் காட்டப்படுகின்றது.**

அட்டவணை 10 : கருத்திட்ட செலவினம் (உள்ளூர்):

| பெயர் | TCE ரூபா | 2012இல் செலவீனம் ரூபா | 2013 இல் செலவீனம் ரூபா | 31.12.2013 இல் உள்ளவாறான திரண்ட செல. | பௌதீக முன்னேற்ற வீதம் % |
|---|---|---|---|---|---|
| | - | - | - | - | - |
| மொத்தம் | - | - | - | - | - |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

**அட்டவணை 11 இல் செலவினத்தின் ஒப்பீட்டு நிதிசார் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது.**

அட்டவணை 11: பௌதீக முன்னேற்றம் (செலவினம்)

| விடயம் | 2014 இல் ஏற்பாடு ரூபா | 2014 இல் செலவினம் ரூபா | சேமிப்புகள்/மிகை ரூபா |
|---|---|---|---|
| அ. மீண்டெலுபவை தவிர கருத்திட்டம் | 131,858,000 | 138,290,583 | (6,432,583) |
| ஆ. மூலதனம் தவிர கருத்திட்டம் | 11,500,000 | 10,925,709 | 574,291 |
| இ. கருத்திட்டம் – உள்நாட்டு நிதியளிப்பு | - | - | - |
| ஈ. கருத்திட்டம் – வெளிநாட்டு நிதியளிப்பு | - | - | - |
| மொத்தம் | 143,358,000 | 149,216,292 | (5,858,292) |

*குறிப்பு : மேலே (ஆ) நிர்மாண கருத்திட்ட ஏற்பாடு ரூபா 130,000,000 தொகையை உள்ளடக்கவில்லை*

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

**அட்டவணை 12 இல் பிறப்பிக்கப்பட்ட வருமானத்தின் ஒப்பீட்டு நிதிசார் முன்னேற்றம் காட்டப்படுகின்றது.**

**அட்டவணை 12: நிதிசார் முன்னேற்றம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம் )**

| வருமான மூலம் | 2014 இல் ஏற்பாடு ரூபா | 2014 இல் திரட்டல் ரூபா | குறை/ மிகை ரூபா |
|---|---|---|---|
| அ. முன்பட்டப்படிப்பு கற்கைகள் | - | - | - |
| ஆ. பட்டப்பின் படிப்பு கற்கைகள் | 111,600,000 | 112,037,800 | 437,800 |
| இ. உசாவுகைகள் | 20,000,000 | 15,257,175 | (4,742,825) |
| ஈ. ஏனையவை | 56,124,000 | 49,168,517 | (6,955,483) |
| மொத்தம் | 187,724,000 | 176,463,492 | (11,260,508) |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

நிதிசார் செயலாற்றுகை பகுப்பாய்வு - 2013:

1997 இல் ஆரம்பிக்கப்பட்ட நிறுவகத்தின் சுய நிதியிடல் கொள்கையுடன் இயைந்ததாக இவ்வாண்டுக் காலப்பகுதியில் அரசாங்க மூலங்களிலிருந்து எந்தவொரு நிதியையும் நிறுவகம் பெறவில்லை. அவ்வாண்டிலிருந்து மு.ப.நி. மீண்டெலும் செலவினத்திற்காக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அல்லது திறைசேரியிடமிருந்து எந்தவொரு நிதியையும் பெற்றுக்கொள்ளவில்லை.

அட்டவணை 13 இல் 2013 ஆம் ஆண்டின் நிதிசார் செயலாற்றுகை பகுப்பாய்வு விடயங்கள் காட்டப்படுகின்றன.

அட்டவணை 13: நிதிசார் செயலாற்றுகை பகுப்பாய்வு, 2013

| விடயம் | சூத்திரம் | தலா மாணவருக்கான செலவு ரூபா. |
|---|---|---|
| அ. தலா மாணவருக்கான மீண்டெழும் செலவினம் (மீ.செ) | மீ.செ / மாணவர் பலம் எண். | 204,875 |
| ஆ. தலா மாணவருக்கான மூலதன செலவினம் | மூ.செ / மாணவர் பலம் எண். | 16,186 |
| மொத்தம் | | |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

# 10. முகாமைத்துவ சபை

நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்று அமைப்பாகவுள்ள முகாமைத்துவ சபையானது இவ்வாண்டுக் காலப்பகுதியில் பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

## பதவிவழி அலுவலர்கள்

பேராசிரியர் கே.பீ.எம். பொன்சேக்கா, பணிப்பாளரும் சபையின் தலைவரும் (2014 யூன் வரை)

பேராசிரியர் அஜந்த தர்மசிறி, பணிப்பாளரும் சபையின் தலைவரும் (2014 யூலை இலிருந்து)

செயலாளர், உயர் கல்வி அமைச்சு (பிரதிநிதி, திரு.பியசேன ரணபுர)

செயலாளர், பொது நிர்வாக அமைச்சு (பிரதிநிதி, திருமதி பீ.பி.பி.எஸ் அபேகுனவர்தன)

செயலாளர், நிதி அமைச்சு (பிரதிநிதி, திருமதி என். கொடகந்த)

பணிப்பாளர் நாயகம், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் (கலாநிதி ஈ.ஏ. வீரசிங்க)

தலைவர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், (திரு. அர்ஜுன ஹேரத்)

தலைவர், பொறியியலாளர்கள் நிறுவகம், இலங்கை *(கலாநிதி. எஸ்.பீ. விஜயகோன்)*
தலைவர், இலங்கை வர்த்தக சம்மேளனம் (திரு. சுரேஷ் சாஹ் )
பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் (கலாநிதி அமுரா குமார)
பணிப்பாளர், இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவகம் (திரு.கே.தடல்லகே)

## பல்கலைக்கழக பேரவையினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்

பேராசிரியர் அபேயரத்ன பண்டார, நிதித்துறை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
திரு ரீ. தர்மராஜா, பேரவை அங்கத்தவர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
கலாநிதி எச்.எம்.பீ. ஹேரத், பொதுநிர்வாக திணைக்களம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
பேராசிரியர் எச்.எச்.டி.என்.பி. ஒபாதா, மனித வள முகாமைத்துவத் துறை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்:

திரு ஹுசைன் என் யூசுப்அலி, தலைவர், ஹேமாஸ் ஹோல்டிங், பீஎல்சி
திரு. பீ.ஆர்.எல். பெனாண்டோ, தலைவர், சீஐசீ ஹோல்டிங், பீஎல்சி
பேராசிரியர் எச். அபயகுணவர்தன, அங்கத்தவர், ப.மா.ஆ
கலாநிதி. சமன் கேலேகம, பணிப்பாளர், கொள்கை கற்கைகள் நிறுவகம்
கலாநிதி விக்கிரம வீரசூரிய, இலங்கை காப்புறுதி குறைகேள் அதிகாரி

# 11. கற்கைச் சபை

நிறுவகத்தின் கற்கைச் சபை இவ்வாண்டுக்காலப்பகுதியல் கற்பித்தல், பரீட்சைகள் மற்றும் ஆராய்ச்சிகளோடு தொடர்புடைய விடயங்களை ஒழுங்குறுத்தியதோடு பின்வரும் அங்கத்தவர்களை பிரதிநிதிகளாகக்கொண்டிருந்தது.

### வியாபார நிருவாக கற்கை சபை

பேராசிரியர் கே.பீ.எம். பொன்சேக்கா, பணிப்பாளரும் சபையின் தலைவரும் (2014 யூன் வரை)
பேராசிரியர் அஜந்த தர்மசிறி, பணிப்பாளரும் சபையின் தலைவரும் (2014 யூலை இலிருந்து

பேராசிரியர். சம்பத் அமரதுங்க, பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள், வர்த்தக பீடம், ஸ்ரீ.ஜ.ப.

பேராசிரியர். டேவிட் இவன்ஸ், வருகைதரு பேராசிரியர்

திரு. ஏட்லி பெரேரா, பணிப்பாளர், டுனமிக்ஸ் கெபிடல், பிஎல்சி

கலாநிதி. ராவிஸ் பேரேரா, சிரேட்ட உசாவுநர், மு.ப.நி

திரு.எம்.ஆர்.பிரேலிஸ், கம்பனி பணிப்பாளர்.

## பொது நிருவாக கற்கை சபை

பேராசிரியர் கே.பீ.எம். பொன்சேக்கா, பணிப்பாளரும் சபையின் தலைவரும் (2014 யூன் வரை)

பேராசிரியர் அஜந்த தர்மசிறி, பணிப்பாளரும் சபையின் தலைவரும் (2014 யூலை இலிருந்து பேராசிரியர்.

ஏ.கே.டப். ஜயவர்தன, துணைவேந்தர், மொறட்டுவ பல்கலைக்கழகம்

கலாநிதி. லொய்ட் பெர்ணாந்து, நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளார் (பொதுக் கொள்கை), மு.ப.நி

கலாநிதி. விக்ரம வீரசூரிய, இலங்கை காப்புறுதி குறைகேள் அதிகாரி.

கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, சனாதிபதி வழக்குரைஞர்

திரு டப்.ஏ. விஜயவர்தன, முன்னாள் பிரதி ஆளுநர். மத்திய வங்கி

# 12. எதிர்கால திட்டங்கள்

மு.ப.நி. மாணவர்களின் ஆராய்ச்சி அறிக்கைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு கூடிய கவனத்தை செலுத்துதல் வேண்டும். அறிக்கைகள் முன்வைப்பு சார்ந்த உள்ளடக்கத்திற்கு மேலதிகமாக முன்னேற்றம் தேவைப்படுகின்றது. மாணவர்கள் பாரிய தர அளவுகளுக்கும் இணைந்த ஆராய்ச்சி முறைமைகளுக்கும் வெளிப்படுத்தப்படவேண்டிய தேவையை கொண்டுள்ளனர். இலங்கை முகாமைத்துவ சஞ்சிகையை ஆராய்ச்சி வெளியீடுகளின் தரமான மேம்பாட்டுக்காக தரப்படுத்திய அந்தஸ்தை அடைந்துகொள்வதற்காக தீர்க்கமான முயற்சி மேற்கொள்ளப்பட்டு பதவியினர் முக்கியமானவர்களாக நோக்கப்படவேண்டும். இந்தவகையில் நிறுவகத்தினுள் ஆராய்ச்சி நிலையமொன்றை தாபிப்பதற்கான தேவை பாரியதாக மேலெழுந்தள்ளது.

இதற்கு மேலதிகமாக நிருவகத்தினால் நடாத்தப்படுகின்ற எம்பிஏ நிகழ்ச்சித்திட்டத்தை உள்ளடக்க ரீதியாகவும், முன்வைப்பு ரீதியாகவும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இணைக்கப்பட்ட கற்றல் வழிமுறைகளை பயன்படுத்தி தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதானது பயனுள்ளதாக இருக்கும் என்பதோடு நாட்டின்

தூர பகுதிகளிலிருந்தும் மாணவர்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துவதாகவும் அமையும்.

மு.ப.நி. மற்றும் அதன் பிரதான பாடநெறியான எம்பீஏ வளர்ந்துவரும் போட்டித்தன்மை சூழலில் பல வருடங்களாக மிகவும் போட்டியானதாக இருந்துவருகின்றது.பொருத்தப்பாடும் தரமும் வெற்றிகரமான இரண்டு பிரதான காரணிகளாக இருந்துள்ளன. தனது தெரிவு செய்த பாதையான எம்பீஏ, எம்பிஏ மற்றும் பிஎச்டி, முக்கிய பாடநெறிகள், ஆராய்ச்சி துறைகளில் கீர்த்திமிக்கதாக தொடர்ந்தும் செயற்படுவது நிறுவகத்தின் அவாவாக இருப்பதோடு விசேடமாக தனியார் துறையிடமிருந்து வாடிக்கையாளர்களின் குறிப்பான பயிற்சி மற்றும் அபிவிருத்தி தேவைகளை நிறைவுசெய்வதற்கான முன்னோடியான நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலும் மிகுந்த கவனம் செலுத்துவதாகும். பீடத்தினது விரிவாக்கம் மற்றும் அதன் தொடரான அபிவிருத்திகளுடன் உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது மேற்படி கற்கை ஆய்வு, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு இடம்பெறுவதற்கு வழியமைப்பதாக இருக்கும்.

பேராசிரியர் அஜந்த தர்மசிறி
பணிப்பாளர்
2015 யூன் 30 ஆந் திகதி

**முகாமைத்துவ பட்டபின் படிப்பு நிறுவகம்**

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**

**2014 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் அறிக்கைகள் பற்றிய முகாமைத்துவ சபையின் பொறுப்பு அறிக்கை.**

2014 திசெம்பர் 31ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதியாண்டிற்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்து பட்டபின் படிப்பு நிறுவகத்தின் நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தராதரங்களுக்கமைவாக (SLPSAS) தயாரிக்கப்பட்டிருப்பதோடு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழககங்கள் சட்டம் தொடர்புடைய பிரிவுகள், 1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட அமைப்பிலும் வடிவத்திலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

நிதிசார் கூற்றறிக்கைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிசார் சட்டத்தின் நிதிசார் ஒழுங்குவிதிகளுக்கமைவாகவும் அவற்றின் விதிகள் நடைமுறைகளை தழுவியதாகவும் பொருத்தமான நிபந்தனைகளுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. நிதிசார் கட்டுப்பாட்டு முறைமைகள் மிகவும் நடைமுறைச் சாத்தியமானதாக கொடுக்கல் வாங்கல்களின் உரிய தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலும் செலவினங்களில் வினைத்திறனை உறுதிப்படுத்தும் வகையிலும் பேணப்பட்டிருக்கின்றன. எமது அறிவுக்கு எட்டிய வகையில் 2014 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருப்பதோடு அது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் உண்மையானதும் நியாயமானதுமான கண்ணோட்டத்தை தெளிவுபடுத்துவதாகவுள்ளது.

**ஒப்பம்**

**கலாநிதி. அஜன்தா தர்மசிரி**

**பணிப்பாளர்**

**2015 யூன் மாதம் 22ஆம் திகதி**

## 2014 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் செயலாற்றுகை

(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)

| வருமானம் | 31-12.2014 | 31-12-2013 |
|---|---|---|
| பதிவுக்கட்டணம் (பட்டத்தின் படிப்பு) | 850,793.00 | 96,650.00 |
| வகுப்புக் கட்டணங்கள் (பட்டப்பின் படிப்பு) | 112,037,800.00 | 90,399,979.00 |
| பரீட்சை கட்டணம் (பட்டத்தின் படிப்பு) | 540,200.00 | 612,275.00 |
| முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 15,257,175.00 | 13,654,987.00 |
| எம்பிஏ நிகழ்ச்சித் திட்டம் | 6,955,300. | 14,603,310.00 |
| விண்ணப்படிவக் கட்டணங்கள் | 801,900.00 | 533,000.00 |
| பட்டமளிப்பு விழாக் கட்டணங்கள் | 4,198,000.00 | 4,820,000.00 |
| | 140,641,168.00 | 124,720,202.00 |
| ஏனைய வருமானம் | | |
| முதலீடுகள் மீதான வட்டி | 17,361,723.00 | 22,671,238.58 |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி | 94,461.81 | 82,061.89 |
| சொத்துக்களிலிருந்தான வாடகை | 14,843,405.00 | 12,149,925.00 |
| பழைய களஞ்சியப் பொருட்களின் விற்பனை மீதான இலாபம்(இழப்பு) | 1561,445.00 | 113,050.00 |
| வெளிநாட்டு செலாவணி பெறுகைகள் | (3,428.94) | 29,956.85 |
| சீஐஓ கருத்திட்டம் (ஈ- ஆளுகை) | | 1,375,000.00 |
| வெளியீடுகளின் விற்பனை | 557,410.00 | 1,932,400.00 |
| நூலகத் தண்டப்பணங்களும் கட்டணங்களும் | 175,965.00 | 155,562.50 |
| வியாபாரத் தலைவர்களுக்கான பகிரங்கக் கொள்கை தொடர்பான விஸ்தரிப்பு பாடநெறிகள் | 935,000.00 | 1,980,000.00 |
| ஆராய்ச்சி செயலமர்வுகள் | 30,000.00 | 100,000.00 |
| நானாவித பெறுகைகள் | 2,389,233.09 | 5,202,315.94 |
| | **35,822,324.46** | **45,791,510.76** |

| | | |
|---|---|---|
| **நிருவாக செலவினங்கள்** | | |
| பொது நிருவாகமும் பதவியினர் சேவைகளும் | 54,446, 264.85 | 48,517,182.97 |
| கல்விசார் சேவைகள் | 43,498,719.04 | 38,023,856.24 |
| கற்பித்தல் மூலவளங்கள் | 3,061,395.30 | 5,019,540.10 |
| துணைச் செயற்பாடுகள் | 3,594,424.77 | 3,785,460., |
| முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 9,502,373.00 | 10,768,067.95 |
| எம்பிஏ நிகழ்ச்சித்திட்டம் | 4,672,269.51 | 6,347,835.60 |
| சீஐஓ கருத்திட்டம் (ஈ - ஆளுகை ) | - | 1,818,845.00 |
| முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக வெளியீடுகளுக்கான செலவினம் | 914,737.92 | 612,793.07 |
| வியாபார தலைவர்களுக்கான பொது கொள்கை தொடர்பான விஸ்தரிப்பு பாடநெறி | 401,276.40 | 1,716,135.00 |
| ஆராய்ச்சி செயலமர்வு | - | 124,400.00 |
| அறவிடமுடியாக்கடன்கள் | 1,882,500.00 | - |
| தேய்மானம் | 16,316,622.65 | 12,805,830.19 |
| நானாவிதக் கொடுப்பனவுகள் | - | 187,478.14 |
| | **138,290,583.44** | **129,727,425.24** |
| **மீள்மதிப்பீட்டு பெறுகைககளுக்கு முன்னரான ஆண்டுக்கான மிகை** | **38,172,909.02** | **40,784,287.77** |
| பிபிஈ மீள்மதிப்பிட்டின் மீதான பெறுகைகள் | 10,661,270.38 | |
| **பிபிஈ மீதான மீள்மதிப்பிட்டின் பெறுகைக்குப் பின்னர் ஆண்டுக்கான மிகை** | **48,834,179.40** | **40,784,287.77** |

## 2014 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று உள்ளவாறான நிதி நிலைமை பற்றிய கூற்று

**(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)**

| ஆதனங்கள் | குறிப்பு | 31 திசெம்பர் 2014 | 31 திசெம்பர் 2013 |
|---|---|---|---|
| நடைமுறை அல்லாத ஆதனங்கள் | | | |
| சொத்து பொறித்தொகுதி - உபகரணம் | 12 | 70,239,907.38 | 65,715,876.74 |
| **நடைமுறை ஆதனங்கள்** | | | |
| பொருட்பட்டியல் | 13 | 4,407,486.21 | 5,079,790.68 |
| கடன்பட்டோர் | | 1,641,000.00 | 1,641,000.00 |
| பதவியினருக்கான கடன்களும் முற்பணங்களும் | 14 | 2,665,453.05 | 2,399,094.39 |
| முற்பணங்கள் | | 3,870,000.00 | 7,500.00 |
| கொடுப்பனவுகள் | | 143,010.40 | 175,855.36 |
| வைப்புக்கள் | 15 | 6,274,525.31 | 11,715,884.34 |
| நிலையான வைப்புக்கள் | 16 | 246,290,062.60 | 201,625,919.11 |
| காசும் காசு சம்பணிகளும் | 17 | 13,941,116.66 | 27,836,354.56 |
| **மொத்த ஆதனங்கள்** | | **349,472,561.61** | **316,197,275.18** |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | |
| **ஒப்புரவு** | | | |
| மூலதனக்கொடை | | 166,896,089.57 | 166,896,089.57 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | | 10,661,270.38 | - |
| பொது ஒதுக்கு | | 63,569,358.60 | 25,342,621.58 |
| நன்கொடை ஒதுக்கு | | 2,036,493.97 | 2,036,493.97 |
| அறக்கொடை நிதியம் | 18 | 378,655.94 | 365,555.54 |

| | | | |
|---|---|---|---|
| மொத்த ஒப்புரவு | | 243,631,868.46 | 194,730,760.66 |
| | | | |
| நடைமுறை அல்லா பொறுப்புக்கள் | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 8,542,648.94 | 8,138,105.03 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| முற்பணமாக கிடைக்கப் பெற்ற வருமானம் | 19 | 70,398,955.00 | 92,012,220.00 |
| பெறப்பட்ட வைப்புக்கள் | 20 | 1,099,260.51 | 1,919,260.51 |
| வர்த்தகமும் ஏனைய செலுத்த வேண்டியவைகளும் | 21 | 25,799,828.56 | 19,396,928.98 |
| மொத்த நடைமுறை பொறுப்புகள் | | 97,298,044.07 | 113,328,409.49 |
| மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும் | | 349,472,561.47 | 316,197,275.18 |

நிறுவகத்தின் நிதிசார் கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கழலைக்கழக சட்டத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கட்டளைச் சட்டம் என்பவற்றின் தேவைப்பாடு என்பவற்றுடன் இயைந்ததாக உள்ளதென நான் உறுதிப்படுத்துகின்றேன்.

முகாமைத்துவ சபைக்காகவும் அதன் சார்பிலும்

**ஒப்பம்**

**பி.ஜீ மைத்திரிரத்ன**

பிரதிப் பொருளாளர்

**ஒப்பம்**

**கலாநிதி அஜந்தா தர்மசிரி**

பணிப்பாளர்

**ஒப்பம்**

**ஜே.கே.எஸ். ரணபுர**

சிரேட்ட உதவிப் பதிவாளர்

## முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

(இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)

| | உண்மை | மதிப்பிடப்பட்ட | வேறுபாடு |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| பதிவுக்கட்டணம் (பட்டத்தின் படிப்பு) | 850,793.00 | | 850,793.00 |
| வகுப்புக் கட்டணங்கள் (பட்டப்பின் படிப்பு) | 112,037,800.00 | 111,600,000.00 | 437,800.00 |
| பரீட்சை கட்டணம் (பட்டத்தின் படிப்பு) | 540,200.00 | | 540,200.00 |
| முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 15,257,175.00 | 20,000,000.00 | (4,742,825.00) |
| எம்பிஏ நிகழ்ச்சித் திட்டம் | 6,955,300. | 14,250,000.00 | (7,294,700.00) |
| விண்ணப்பபடிவக் கட்டணங்கள் | 801,900.00 | 1,000,000.00 | (198,100.00) |
| பட்டமளிப்பு விழாக் கட்டணங்கள் | 4,198,000.00 | 5,000,000.00 | (802,000.00) |
| | **140,641,168.00** | **151,850,000.00** | **(11,208,832.00)** |
| **ஏனைய வருமானம்** | | | |
| முதலீடுகள் மீதான வட்டி | 17,361,723.00 | 18,000,000.00 | (638,276.50) |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி | 94,461.81 | 74,000.00 | 20,461.81 |
| சொத்துக்களிலிருந்தான வாடகை | 14,843,405.00 | 15,000,000.00 | (156,595.00) |
| பழைய களஞ்சியப் பொருட்களின் விற்பனை மீதான இலாபம்(இழப்பு) | 561,445.00 | | 561,445.00 |
| வெளிநாட்டு செலாவணி பெறுகைகள் | (3,428.94) | | (3.428.94) |
| வெளியீடுகளின் விற்பனை | 557,410.00 | 450,000.00 | 107,410.00 |
| நூலகத் தண்டப்பணங்களும் கட்டணங்களும் | 175,965.00 | 150,000.00 | 25,965.00 |
| வியாபாரத் தலைவர்களுக்கான பகிரங்கக் கொள்கை தொடர்பான விஸ்தரிப்பு பாடநெறிகள் | 935,000.00 | | 935,000.00 |

| | | | |
|---|---|---|---|
| ஆராய்ச்சி செயலமர்வுகள் | 30,000.00 | | 30,000.00 |
| நானாவித பெறுகைகள் | 2,389,233.09 | 2,200,000.00 | 189.233.09 |
| | 35,822,324.46 | 35,874,000.00 | (51,675.54) |
| **நிருவாக செலவினங்கள்** | | | |
| பொது நிருவாகமும் பதவியினர் சேவைகளும் | **54,446, 264.85** | 51,500,000.00 | 2,946,264.85 |
| கல்விசார் சேவைகள் | **43,498,719.04** | 46,000,000.00 | (2,501,280.96) |
| கற்பித்தல் மூலவளங்கள் | **3,061,395.30** | 2,500,000.00 | 561,395.30 |
| துணைச் செயற்பாடுகள் | **3,594,424.77** | 2,358,000.00 | 1,236,424.77) |
| முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | **9,502,373.00** | 15,000,000.00 | (5,497,627.00) |
| எம்பிஏ நிகழ்ச்சித்திட்டம் | **4,672,269.51** | 12,000,000.00 | (7,327,730.49) |
| முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக வெளியீடுகளுக்கான செலவினம் | **914,737.92** | 2,500,000.00 | (1,585,262,08) |
| வியாபார தலைவர்களுக்கான பொது கொள்கை தொடர்பான விஸ்தரிப்பு பாடநெறி | 401,276.40 | | 401,276.40 |
| அறவிடமுடியாக்கடன்கள் | 1,882,500.00 | | 1,882,500.00 |
| தேய்மானம் | 16,316,622.65 | | 16,316,622.65 |
| நானாவிதக் கொடுப்பனவுகள் | | | |
| | 138,290,909.02 | | 6,432,583.44) |
| **மீள்மதிப்பீட்டு பெறுகைககளுக்கு முன்னரான ஆண்டுக்கான மிகை** | 38,172,909.02 | | (17,693,090.98) |
| பிபிஈ மீள்மதிப்பிட்டின் மீதான பெறுகைகள் | 10,661,270.28 | | 10,661,270.28 |
| **மீள்மதிப்பிட்டின் பெறுகைக்குப் Kd;dh;ன்னர் ஆண்டுக்கான மிகை** | 48,834,179.30 | 55,866,000.00 | (7,031,820.70) |

**2014 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான ஒதுக்களின் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்றறிக்கை**

**(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)**

| | மூலதனக் கொடை | மீள்மதிப்பிட்டு ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | நன்கொடை ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2013.01.01. இல் உள்ளவாறான நிலுவை | 166,986,089.57 | - | 15,441,666.19 | 2,036,493.97 | 153,580,917.35 |
| ஆண்டுக்கான மிகை | - | - | 40,784,287.77 | - | 40,784,287.77 |
| 2013.12. 31. இல். உள்ளவாறான நிலுவை | 166,986,089.57 | | 25,342,621.58 | 2,036,493.97 | 194,365,205.12 |
| ஆண்டுக்கான மிகை | - | - | 38,172,909.02 | - | 38,172,909.02 |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | | | 53,822.00- | | 53,822.00- |
| பிபிஈ மீள் மதிப்பிட்டின் மீதான பெறுகைகள் | - | 10,661,270.38 | - | - | 10,661,270.38 |
| 2014.12.31.இல்.உள்ளவாறான நிலுவை | 166,986,089.57 | 10,661,270.38 | 63,569,358.60 | 2,036,493.97 | 243,253,212.52 |

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**2014 திசெம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று**

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)*

| | திசெம்பர் 31, 2014 | திசெம்பர் 31, 2013 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| ஆண்டுக்கான மிகை (குறைப்பு)<br>***சீராக்கல்கள்:*** | 38,172,909.02 | 40,784,287. |
| தேய்மானம் | 16,316,622.65 | 12,805,830.30 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 404,543.91 | 880,933.80 |
| பழைய களஞ்சிய பொருட்களின் விற்பனை மீதான இழப்பு | 561,445.00 | - |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி | (94,461,81) | (82,061.80) |
| முதலீடுகளிலிருந்தான வட்டி | (17,361,723.50) | (22,671,238.50) |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **37,999,335.27** | **31,717,751.30** |
| **தொழிற்பாட்டு மூலதனத்தின் மாற்றம்** | | |
| இருப்புக்களின் (அதிகாரிப்பு) வீழ்ச்சி | 672,304.47 | (3,288,553.70) |
| நானாவித முற்பணங்களில் (அதிகாரிப்பு) வீழ்ச்சி | (3,863,200.00) | 914,500.00 |
| முற்கொடுப்பனவுகளில்(அதிகாரிப்பு) வீழ்ச்சி | 32,844.96 | 1,587,710.20 |
| சில்லறை கடன்பட்டோரில் (அதிகாரிப்பு)வீழ்ச்சி | 5,078,441.35 | 62,883.60 |
| பெற்ற வைப்புக்களில் அதிகரிப்பு (வீழ்ச்சி ) | (820,000.00) | (1,564,707.14) |
| அட்டுறு செலவினங்களின் அதிகரிப்பு (வீழ்ச்சி ) | 4,013,,,357.31 | 401,574.91 |
| முற்பணங்களில் பெறப்பட்ட வருமானத்தில் அதிகரிப்பு (வீழ்ச்சி ) | (21,613,265.00) | 16,754,623.62 |
| ஏனைய (பொறுப்புக்களில் அதிகரிப்பு (வீழ்ச்சி ) | 2,389,542.27 | (3,568,134.10) |
| தொழிற்பாடுகளிலிருந்தான உருவாக்கப்பட்ட காசு | **23,889,360.63** | **42,088,731.74** |

| | | |
|---|---|---|
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| காணி மற்றும் கட்டடங்களின் கொள்வனவு | - | (393,400.00) |
| ஆய்வுகூட, கற்பித்தல் உபகரணங்களின் கொள்வனவு | (1,390,071.08) | (585,625.50) |
| நூலக புத்தகங்கள், பருவகால வெளியீடுகளின் கொள்வனவு | (727,499.95) | (1,193,394.50) |
| அலுவலக தளபாட மற்றும் கருவிகளின் கொள்வனவு | (8,635,533.74) | (4,299,709.26) |
| பழைய களஞ்சிய பொருட்களின் விற்பனை வருமதி | 66,805.00 | - |
| கடன் மற்றும் முற்பணங்களின் வீழ்ச்சி | (266,358,66) | (212,132.78) |
| முதலீடுகள் | (44,301,225.81) | (55,128,70751) |
| கடன் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி | 94,461.81 | 82,061.89 |
| முதலீடுகள் மீதான வட்டி | 17,361,723.50 | 22,671,238.58) |
| முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல் | (37,797,698.93) | (39,059,668.58) |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| அறக்கொடை நிதியம் | 13,100.40 | 13,100.40 |
| நிதி செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல் | 13,100.40 | 13,100.40 |
| ஆண்டு காலப் பகுதியில் காசு மற்றும் காசு சமனிகளின் | (13,895,237.90) | 3,042,163.56) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசு சமனிகள் தேறிய மாற்றம் | 27,836,354.56 | 24,794,191.00 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசு சமனிகள் | 13,941,116.66 | 27,836,354.56 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசு சமனிகளின் பிரதிபலிப்பு | 31.12.2014 | 31.12.2013 |
| வங்கியிலுள்ள காசு | 13,941,116.66 | 27,836,354.56 |
| | 13,941,116.66 | 27,836,354.56 |

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## 2014 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 1. அறிக்கையிடல் அமைப்பு

முகாமைத்துவ பட்டபின் படிப்பு நிறுவகமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழக சட்டத்தின் கட்டளைச் சட்டத்தினால் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக 1986 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஓரளவு சுயாதீனத் தன்மை கொண்ட அமைப்பாகும்.

அதன் நோக்கங்களாக பட்டபின் படிப்பு, அறிவுறுத்தல், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவமும் நிருவாக கற்கைகளின் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி என்பவற்றை வழங்குவதனூடாக இலங்கையில் முகாமைத்துவத்தை உயர் கல்வி தொழில்வாண்மைத் துறையை மேம்படுத்துவதாகும்.

நிறுவகமானது ஒரே நேரத்தில் 500 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வசதிகளை வழங்குவதோடு அது விரிவுரை மண்டபங்கள், பீட அறைகள், தகவல் தொழில்நுட்ப நிலையம், நூலகம் மற்றும் உணவகம் என்பவற்றைக் கொண்டதாகவுள்ளது.

நிறுவகமானது வளாகத்தின் தரம் விரிவுரை மண்டபங்கள் கல்விசார் உபகரணங்களின் தொழில்வாண்மையையும் நவீன நோக்கங்களையும் பேணுவதாக இருக்கின்றது.

இலங்கையின் பல்கலைக்கழக முறைமையில் ஒரு தனித்துவமான உயர் கற்றல் நிறுவனம் என்ற வகையில் முகாமைத்துவ கல்வி நிறுவனமானது 1998 ஆம் ஆண்டிலிருந்து சுய நிதியிடப்பட்ட ஒரு அமைப்பாக இருந்து வருகின்றது. முகாமைத்துவ பட்டத்தின் படிப்பு நிறுவகமானது 2500 க்கும் மேற்பட்ட எம்பீஏ மற்றும் எம்பிஏ பட்டதாரிகளையும் டிப்ளோமாதார்களையும் உருவாக்கியுள்ளது.

### 2. நிதிசார் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

ஆளுகை அமைப்பானது (முகாமைத்துவ சபை) இலங்கை தொழிற்துறைக் கணக்கீட்டு தராதரங்களுக்கமைவாக நிதிசார் கூற்றுக்களை தாயரித்து முன்வைப்பதற்கு பொறுப்பாகவுள்ளது.

3. நிதிசார் கூற்றுக்கள் இலங்கை தொழில்துறை கணக்கீட்டு தராதரங்கள் , 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டங்கள், 1971 ஆம் ஆண்டின் 38 அம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றிற்கு இயைந்ததாக தயாரிக்கப்படுகின்றது.

### ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் தொடராக நிறுவகத்தினால் பிரயோகிக்கப்பட்டு வருவதோடு அவை முன்னைய ஆண்டைப் போலவே நிலையானதாக உள்ளன.

முன்னைய ஆண்டின் புள்ளிவிபரங்கள் ஒப்பீட்டு நோக்கத்திற்காக சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

**4. சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

**அ. செலவு**

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன செலவு குறைக்கப்பட்ட திரட்டிய தீர்மானத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

**ஆ. தேய்மானம்**

அனைத்து சொத்துக்கள், பொறித்தொகுதிகள் உபகரணங்கள் சுயமான காணி தவிர்ந்த ஏனையவற்றின் மீதான செலவினங்கள் நேரடி முறைமையொன்றைப் பயன்படுத்தி தேய்மானத்தை கணக்கிடுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு மேலும் சமமான தவணைகளில் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு அதற்கான தொகையை பதிவளித்து செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வருடாந்த பயன்பாட்டு வீதங்கள் கீழே தரப்பட்டுள்ளன**

| | |
|---|---|
| கட்டடம் | 5% |
| தளபாடங்களும் உபகரணங்களும் | 10% |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திர சாதனங்கள் | 10% |
| ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணம் | 20% |
| அலுவல உபகரணங்கள் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| பட்ட ஆடைகள் | 20% |
| புத்தகங்களும் பருவ வெளியீடுகளும் | 20% |

சொத்துக்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் தேய்மானம் சொத்துக்கள் பறித்தொகுதி மற்றும் ஆதனங்கள் பயன்பாட்டுக்காக விற்கின்ற சந்தர்ப்பத்திலேயே ஏற்பாடு செய்யப்படுகின்றன.

**5. முதலீடுகள்**

குறுங்கால நிலையான வைப்புக்களை உள்ளடக்கிய வைப்புக்கள் செலவு விகிதத்தில் குறிப்பிடப்படுகின்றன.

6. இவ்வாண்டுக்காலப்பகுதியில் விலைமதிப்புத் திணைக்களத்தினால் பின்வரும் ஆதனங்கள் மீள்மதிப்பீடுசெய்யப்பட்டிருப்பதோடு 2014 ஏப்பிரல் 01 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிசார் கூற்றுக்களில் சேர்க்கப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

| விடயம் | மீள்மதிப்பீட்டுபெறுகை/ இழப்பு |
|---|---|
| 1. தளபாடம் | 4,761,623.39 |
| 2. அலுவலக உபகரணம் | 10,424,584.76 |
| 3. ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | (4,568,125.95) |
| 4. பொறித்தொகுதி மற்றும் இயந்திரசாதனங்கள் | 43,188.18 |
| | 10,661,270.38 |

**7.நடைமுறைப் பொறுப்புக்கள்**

நிதிசார் நிலைமைக் கூற்றில் உள்ள நடைமுறைப் பொறுப்புக்கள் நிதிசார் நிலைமையின் கூற்றில் திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் இடம்பெறுபவற்றிற்கு எதிர்பார்ப்பக்கப்படுபவையாக உள்ளன.

**8. ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள்**

**அ. வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம் - பணிக்கொடை**

இலங்கை கணக்கீட்டு தராதரங்கள் 19 இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு பணிக்கொடை சூத்திர முறைமையின் அடிப்படையில் பணிக்கொடை பொறுப்புக்கான ஏற்பாடுகள் நிறுவகத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கொடுப்பனவுக்கான பொறுப்பு ஊழியரொருவரினால் தொடராக ஐந்து வருட சேவை பூர்த்தி செய்ததன் பின்னரே எழுகின்றது.

**ஆ. வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் - பல்கலைக்கழக சேமலாப நிதியம், பல்கலைகழங்கள் ஓய்வூதிய நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி**

ஒய்வூதிய திட்டத்தை தொிவு செய்யாத ஊழியர்களை பொறுத்தவரையில் நிறுவகமானது ஊழியர்களின் மொத்த வேதனாதியில் 15%பங்களிப்பு பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு செய்யப்படுகின்றது. வாழ்க்கைச் செலவு படி உள்ளடங்களாக

ஒய்வூதிய திட்டம் இணைந்திருக்கின்ற ஊழியர்களைப் பொறுத்தவரையில் நிறுவகமானது பல்கலைகழக சேமலாப நிதிச் சட்டங்கள் பல்கலைக்கழகங்கள் ஒய்வூதிய நிதியத்திற்கும் முறையே ஊழியர்களின் மொத்த வேதானாதிகளிலிருந்து 7% மற்றும் 8% செலுத்துகின்றது.

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு நிறுவகத்தின் பங்களிப்பு ஊழியர்களின் மொத்த வேதனாதிகளில் 3% ஆகவுள்ளது.

## 9. வருமான அங்கீகாரிப்பு

வருமானமானது பொருளாதார நன்மை நிறுவனத்திற்கு பாய்ச்சப்படும் என்ற அடிப்படையிலும் ஏற்படுத்த இணைந்த செலவு என்பவற்றின் அளவுக்கு ஏற்பவும் அங்கீகரிக்கப்படுகின்றது.

### அ. வகுப்புக் கட்டணங்கள்

மாணவர்களிடமிருந்து வகுப்புக் கட்டணமாக பெறப்படும் வருமானம் கால அளவு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### ஆ. முதலீடுகளிலிருந்தான வட்டி

நிலையான வைப்புக்களிலிருந்தான வைப்புக்களானது அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### இ. கருத்திட்டங்களிலிருந்தான வருமானம்

கருத்திட்டங்களிலிரந்தான வருமானமானது அவை பூர்த்தி செய்வதன் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### ஈ. ஏனைய வருமானம்

அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 10. செலவீன அங்கீகாரம்

ஏற்பட்ட செலவு வருமானத்தில் குறிப்பான உழைப்பு என்பவற்றிக்கிடையேயான நேரடி தொடர்பு என்ற அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவீனம் அங்கீகரிக்கப்படுகின்றது. நிறுவனத்தின் தொழிற்பாட்டில் ஏற்படுகின்ற அனைத்து செலவினங்களும் மற்றும் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் வினைத்திறன் மிக்க பேணுகை என்பனவும் வருமானத்திற்காக அறவிடப்படுகின்றன.

## 11. காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்றுக்களில் குறிப்பிடப்படுகின்ற காசும் காசு சமனிகளும் கையிலுள்ள காசையும் சேமிப்பு வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

காசுப் பாய்ச்சல் கூற்றானது இலங்கையில் பொதுத்துறை கணக்கீட்டுத் தராதரங்கள் இலக்கம் 2 இல் காசு பாய்ச்சல் தொடர்பான ஒரு கூற்றின் அடிப்படையில் காசு பாய்ச்சல் தயாரித்தலின் “மறைமுக முறைமையைப்” பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றது.

12. நிறுவகத்தின் முன்னாள் பிரதி பொருளாளர், தனக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக காரணம் கூறி நிறுவகத்தின் விசாரணைகளை மீது குற்றம்சாட்டி நிறுவகத்திடமிருந்து ரூபா 30 மில்லியன் தொகையை கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல்செய்துள்ளார்.

## 2014 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

12. செலவு – சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள்

| செலவு/ மீள்மதிப்பீடு | 2014.01.01 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை | சேர்ப்புகள் | நீக்கங்கள் | சீராக்கல்கள் | மீள்மதிப்பீடு பெறுகை (இழப்பு) | 2013.12.31ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| காணி | 5,000,000.00 | - | - | - | - | 5,000,000.00 |
| காணி மற்றும் கட்டங்களின் புனர்நிர்மானமும் புத்தாக்கமும் | 25,864,929.74 | 2,660,542.28 | - | - | - | 28,525,472.02 |
| தளபாடம் | 23,912,934.40 | 2,076,890.00 | (890,750.00) | (16,101,756..79) | 4,761,623.39) | 13,758,941.00 |
| ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 27,168,602.31 | 1,390,071.08 | (21,750.00) | (20,110,766.34) | (4,568,125.95) | 3,858,031.10 |
| நூலக புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள் | 21,757,519.00 | 727,499.95 | - | - | - | 22,485,018.95 |
| மோட்டார் வாகனம் | 12,814,527.00 | - | - | - | - | 12,814,997.00 |
| பட்ட ஆடைகள் | 2,074,527.00 | -- | - | - | - | 2,074,527.00 |
| அலுவலக பொருத்துகளும் உபகரணங்களும் | 3,050,032.04 | - | - | - | - | 3,050,032.04 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 20,305,242.23 | 4,070,706.46 | (368,750.00 | (16,432,939.31) | 10,424,584.76- | 17,998,844.14 |
| பொறித்தொகுதியும் இயந்திர சாதனங்களும் | 5,872,567.80 | -- | - | (1,115,755.98) | 43,188.18 | 4,800,000.00 |
| கட்டடங்கள் | 60,616,211.37 | - | - | - | - | 60,616,211.37 |
| | **208,437,562.89** | **10,925,709.77** | **(1,281,250.00)** | **(53,761,218.42)** | **10,661,270.38** | **174,982,074.62** |

| **தேய்மானம்** | **2014.01.01 ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை** | **ஆண்டுக்கானது** | **நீக்கங்கள்** | **சீராக்கல்கள்** | **மீள்மதிப்பீடு பெறுகை** | **2014.12.31ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை** |
|---|---|---|---|---|---|---|
| காணி | - | - | -- | - | - | - |
| காணி மற்றும் கட்டடங்களின் புனர்நிர்மானமும் புத்தாக்கமும் | 6,518421.21 | 1,293,246.48 | - | - | - | 7,811,667.69 |
| தளபாடம் | 16,054,313.13 | 2,975,809.52 | 396,158.00) | (16,155,584.79) | - | 2,478,379.86 |
| ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 19,856,134.51 | 1,122,978.85 | (16,312.00) | (20,110,766.34) | - | 861,035.02 |
| நூலக புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள் | 17,278,917.39 | 1,389,960.95 | - | - | - | 18,668,878.34 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | 10,306,987.27 | 1,173,560.00 | - | - | - | 11,480,547.27 |
| பட்ட ஆடைகள் | 1,648,665.00 | 249,760.00 | - | - | - | 1,898,425.00 |
| அலுவலக பொருத்துகளும் உபகரணங்களும் | 2,938,989.72 | 76,731.12 | - | - | - | 3,015,720.84 |
| அலுவலக உபகரணங்கள் | 15,910,496.14 | 4,410,876.17 | (68,625.00) | (16,432,939.31) | - | 3,819,808.00 |
| பொறித்தொகுதியும் இயந்திர சாதனங்களும் | 972,866.98 | 592,889.00 | - | (1,115,755.98) | - | 450,000.00 |
| கட்டடங்கள் | 51,226,894.80 | 3,030,810.56 | - | - | - | 54,257,705.36 |
| | 142,721,686.15 | 16,316,622.65 | (481,095.00) | (53,815.046.42) | 0.00 | 104,742,167.38 |
| பதிவளிக்கப்பட்ட பெறுமதி | | | | | | 70,239,907.24 |

13 பொருட்பட்டியல்

| | 31 திசெம்பர் 2014 | 31 திசெம்பர் 2013 |
|---|---|---|
| மத்திய களஞ்சியங்கள் வெளியீடுகள் (உள்ளூர்) | 4,184,566.28 | 4,184,566.28 |
| மத்திய களஞ்சியங்கள் - (முபநி)வெளியீடுகள் | 1,870,437.00 | |
| சில்லறை நிலையங்கள் | 62,312.40 | 62,312.40 |
| வெளியீடுகள் (சர்வதேச நிலையம்) | 832,912.00 | 832,912.00 |
| நீக்கத்தக்கவை | 171,905.00 | |
| | 4,407,486.21 | 5,079,790.00 |

## 2014 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

14. பதவியினருக்கான கடன்களும் முற்பணங்களும்

| | 31 திசெம்பர் 2014 | 31 திசெம்பர் 2013 |
|---|---|---|
| இடர் கடன் | 1,974,489.28 | 1,974,489.28 |
| பதவியினர் கடன் | 25,513.33 | 25,513.33 |
| கணினிக் கடன் | 81,065.93 | 81,065.93 |
| வாகனக் கடன் | 310,525.85 | 310,525.85 |
| பண்டிகை முற்பணம் | 7,000.00 | 7,500.00 |
| | 2,665,453.05 | 2,399,094.39 |

## 15. வைப்புக்கள்

| | | |
|---|---|---|
| வைப்புக்கள் (சர்வதேச நிலையம் | 438,000.00 | 438,000.00 |
| எம்பீஏ2013 பெறுகை | 413,100.00 | - |
| எம்பிஏ பெறுகை | 222,000.00 | 440,000.00- |
| வட்டிப் பெறுகை | 5,051,425.31 | 8,538,384.34 |
| வெளியீடுகளின் விற்பனையினுர்டான பெறுகை | - | 417,000.00- |
| கலாநிதி பட்ட நிகழ்ச்சித்திட்ட கட்டணத்திற்கான பெறுகை | 150,000.00 | 1,882,500.00- |
| | 6,274,525.31 | 11,715,884.34 |

## 16. நிலையான வைப்புக்கள்

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு இலக்கம் 220141 (இலங்கை வங்கி) | 35,000.00 | 35,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 220209 (இலங்கை வங்கி) | 50,000.00 | 50,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 220018 (இலங்கை வங்கி) | 43,690.00 | 43,690.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 220267 (இலங்கை வங்கி) | 40,000.00 | 40,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 8551587 (இலங்கை வங்கி) | | 1,181,136.86 |
| நிலையான வைப்பு இலக்கம் 8551588 (இலங்கை வங்கி) | | 1,181,780.82 |
| நிலையான வைப்பு இலக்கம் 9543899 (இலங்கை வங்கி) | 3,353,233.22 | 3,034,600.20 |

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு இலக்கம் 9680349 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9680373 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9680289 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9680289 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9680400 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9680415 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9717250 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9735361 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9798584 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9798615 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9802042 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 9802088 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 70393465 (இலங்கை வங்கி) | 2,969,126.89 | 2,639,223.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 70393475 (இலங்கை வங்கி) | 2,969,126.89 | 2,639,223.00 |

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு இலக்கம் 70393484 (இலங்கை வங்கி) | 2,969,126.89 | 2,639,223.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 70393496 (இலங்கை வங்கி) | 2,969,126.89 | 2,639,223.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 70393501 (இலங்கை வங்கி) | 2,969,126.89 | 2,639,223.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 70391658 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 70391699 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 70391966 (இலங்கை வங்கி) | 2,000,000.00 | 2,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 70486798 (இலங்கை வங்கி) | 2,942,266.01 | 2,638,803.60 |
| நிலையான வைப்பு இலக்கம் 70486804 (இலங்கை வங்கி) | 2,942,266.01 | 2,638,803.60 |
| நிலையான வைப்பு இலக்கம் 70505660 (இலங்கை வங்கி) | 2,942,266.01 | 2,638,803.90 |
| நிலையான வைப்பு இலக்கம் 70505677 (இலங்கை வங்கி) | 2,942,266.01 | 2,638,803.90 |
| நிலையான வைப்பு இலக்கம் 73188118 (இலங்கை வங்கி) | 19,287,784.62 | 17,864,649.12 |
| நிலையான வைப்பு இலக்கம் 74147601 (இலங்கை வங்கி) | 30,136,141.14 | 28,149,356.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 74811175 (இலங்கை வங்கி) | 20,000,000.00 | 20,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 75405922 (இலங்கை வங்கி) | 20,000,000.00 | 20,000,000.00 |
| நிலையான வைப்பு இலக்கம் | 7,500,000.00 | - |

| | | |
|---|---|---|
| 75405922 (இலங்கை வங்கி) | | |
| நிலையான வைப்பு இலக்கம் 75405922 (இலங்கை வங்கி) | 15,000,000.00 | - |
| நிலையான வைப்பு இலக்கம் 75405922 (இலங்கை வங்கி) | 10,000,000.00 | - |
| நிலையான வைப்பு இலக்கம் 376062 (தேசிய சேமிப்பு வங்கி) | 14,468,159.35 | 11,772,250.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 424736 (தேசிய சேமிப்பு வங்கி) | 26,487,562.50 | 23,544,500.00 |
| நிலையான வைப்பு இலக்கம் 413214 (மக்கள் வங்கி) | 20,809,938.32 | 18,976,781.25 |

**2014 திசெம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

**17. காசும் காசு சமனிகளும்**

| | 31 திசெம்பர் 2014 | 31 திசெம்பர் 2013 |
|---|---|---|
| வங்கி (இலங்கை வங்கி – பொரளை) கணக்கு இல. 192596 | 13,600,447.07 | 27,493,987.56 |
| வங்கிக் கணக்கிலக்கம் (சர்வதேச நிலையம்) 021580683001 | 87,461.00 | 87,461.00 |
| வங்கி கணக்கிலக்கம் வதிவிட வெளிநாட்டு செலாவணி (சர்வதேச நிலையம்)9719360 | 253,208.59 | 254,906.00 |
| | 13,941,116.66 | 27,836,354.56 |

18. கொடுப்பனவு நிதியம்

| | | |
|---|---|---|
| டீ. எஸ் ஜயசுந்தர தங்கப் பதக்க நிதியம் | 218,471.80 | 218,471.80 |
| திருமதி கமல் கொட தங்கப் பதக்க நிதியம் | 28,567.74 | 28,567.74 |
| நன்கொடை நிதியம் | 118,516.00 | 118,516.00 |
| | **365,555.54** | 365,555.54 |

19. முற்பணமாக கிடைக்கப்பெற்ற வருமானம்

| | | |
|---|---|---|
| எம்பிஏ | 1.658,585.00 | 3,257,520.00 |
| கலாநிதிப் பட்டம் | 3,500,000.00 | 1,650,000.00 |
| எம்பீஏ | 62,240,370.00 | 87,104,700.00 |
| | 70,398,955.00 | 92,012,220.00 |

20. பெறப்பட்ட வைப்புக்கள்

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திர வைப்பு | 45,000.00 | 15,000.00 |
| பாதுகாப்பு வைப்புக்கள் | 35,000.00 | 35,000.00 |
| நானாவித வைப்புகள் (பிஜஎம்ஏ) | 55,000.00 | 905,000.00 |
| நானாவித வைப்பு | 964,260.51 | 964,260.51 |
| | **1,099,260.51** | **1,919,260.51** |

21. வியாபாரமும் ஏனைய செலுத்த வேண்டியவைகளும்

| | | |
|---|---|---|
| சர்வதேச நிலையம் | 7,860,000.00 | 7,860,000.00 |
| அட்டுறு செலவினங்கள் | 13,428,477.84 | 9,415,120.53 |
| முற்பணமாக கிடைக்கப்பெற்ற சந்தாப் பணங்கள் | 1,621,808.45 | 1,621,808.45 |
| எம்பிஏ ஏற்பாடுகள் பரீட்சைக்கான கொடுப்பனவுகள் | - | 500,000.00 |
| மாணவர் புலமைப்பரிசில் (வெளிநாடு) கணக்கு | 228,999.99 | - |
| விஷ்கம் பில்டர்ஸ் | 2,524,569.08 | - |
| உசாவுகை கட்டணம் | 135,973.20 | - |
| | 25,799,828.56 | 19,396,928.98 |

මගේ අංකය / எனது இல. / My No. } ஈசீ/ஈ/பீஜஎம்/6/14/2    මගේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date }    2015 ஆகஸ்ட் 21

பணிப்பாளர்,

முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவகம்.

**ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1985 இன் 03 ஆம் இலக்க முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டியின் 19 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு, 108 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2015 யூன் 09 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III பிரிவின் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இற்கு இணங்க மீள் மதிப்பீடு செய்யப்படும் போது சொத்துக்கள் அணியிலுள்ள முழு சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட 04 வகுப்புக்களுக்குரிய ரூபா 9,427,448 ஆன சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் தீர்மானித்தல் வேறொரு குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இக்குழுவில் குறித்த விடயம் தொடர்பாக விசேட நிபுணத்துவத்துடன் கூடிய ஆளொருவர் உள்ளக்கப்படாதிருந்தமையால் பயன்படு ஆயுட்காலம் மதிப்பீடுகளில் பொருத்தத்தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் மீள் மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்ட சொத்துக்களின் கிரயம், திரண்ட தேய்வினை சரியாக இனங்கண்டு சீராக்கம் செய்யாமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நடைமுறையல்லாச் சொத்துக்களின் கிரயம், திரண்ட பெறுமானத்தேய்வு, ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு மற்றும் மீள்மதிப்பீட்டு மிகை என்பன முறையே ரூபா 2,904,701 தொகை, ரூபா 2,641,326 தொகை, ரூபா 5,240 தொகை மற்றும் ரூபா 383,618 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 5,240 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 263,375 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிலையான வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் புதுப்பித்தல் அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட வட்டி விகிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய முதலீட்டின் மீதான வட்டி வருமானம் ரூபா 16,308,282 தொகையும் பெறவேண்டிய வட்டி ரூபா 5,322,362 ஆகவும் நிதிக்கூற்றுக்களில் வட்டி வருமானம் ரூபா 16,037,345 ஆகவும் பெற வேண்டிய வட்டி ரூபா 5,051,425 ஆகவும் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 270,937 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) நிறுவகத்தினால் கூடுதலாக கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 362,918 ஆன வட்டி வருமானம் சரிசெய்யப்படும் போது வட்டி வருமானக் கணக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக முதலீட்டுக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.3 போதியளவு அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகத்தினால் பௌதீக மற்றும் மனிதவளங்களையும் பயன்படுத்தி நிறுவகத்தின் உத்தியோகபூர்வ முத்திரையுடன் சான்றிதழ்களை வழங்கி 2014 ஆம் ஆண்டினுள் 12 பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதில் 8 ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்த 8 பாடநெறிகளின் தேறிய

மிகையான ரூபா 8,789,675 தொகையில் ரூபா 7,491,476 தொகை மதியுரை சேவைகளிலிருந்து பெறப்படும் பணத்தை செலவிடுவதற்காக விநியோகிக்கப்பட்டுள்ள 2000 சனவரி 19 ஆந் திகதிய 380 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையினை தவறாக பொருட்கோடிட்டு பதவியணியினருக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தினால் திறைசேரி அங்கீகாரமின்றி ரூபா 350,000 கூட்டுத் தொகையொன்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு மானியமாக வழங்கப்பட்டிருந்தது.

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகத்தினால் 2007 ஆம் ஆண்டின் போது சர்வதேச கிளையொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மோசடி காரணமாக 2009 செப்தம்பர் மாதத்தின் போது அக்கிளை மூடப்பட்ட போதிலும், அக்கிளையிலிருந்து பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளாக முறையே 2,911,912 தொகையும் ரூபா 11,603,217 தொகையும் நீண்டகாலமாக புலனாய்வு செய்யப்படாமல் தொடர்ந்தும் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) சேவையிலிருந்து விலகியுள்ள உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,312,500 ஆன பிணைப் பொறுப்பு பெறுமதி ரூபா 89,843 வீதம் 48 தவணைகளில் அறவிட்டுக்கொள்வதற்கு நிர்வாக சபை தீர்மானித்திருந்ததுடன், அதன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேலும் பெறவேண்டிய ரூபா 3,886,484 தொகையை அறவிட்டுக் கொள்வதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1985 இன் 03 ஆம் இலக்க முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டியின் 8(ஐ) ஆம் பிரிவு | நிறுவகத்தின் பணத்தை முதலீடு செய்யும் போது முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமொன்று இல்லாமல் நிறுவகம் ரூபா 50 மில்லியனை முதலீடு செய்திருந்தது. |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபனவிதிக் கோவையின் ix ஆம் அத்தியாயத்தின் 5.1 ஆம் பந்தி | முறையே ரூபா 42,835 மற்றும் ரூபா 46,270 தொகை வீதம் மாதாந்தம் ஆரம்ப சம்பளத்தைப் பெறும் மேலதிக நேரக் கொடுப்பனவிற்கு உரித்தற்ற இரண்டு பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு வழமையான சம்பளம் மற்றும் படிகளுக்கு புறம்பாக 2014 ஆம் ஆண்டிற்காக இணைப்புப் படிகளாக ரூபா 932,250 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக திறைசேரி அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2013 கணக்காண்டின் போது இக்கொடுப்பனவை நிறுத்துவதாக நிறுவகத்தின் பணிப்பாளர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க | நிறுவகத்தினால் இரண்டு சொத்து கைதவிர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், |

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை

கைதவிர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பொருட்களின் பட்டியல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. விலை மதிப்பீட்டுத் திணைக்களம் ரூபா 628,250 தொகைக்கு மதிப்பிடப்பட்டிருந்த 89 அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் ஏனைய 20 உருப்படிகள் என்பன ரூபா 66,805 இற்கும் 2915 பெப்ரவரி 21 ஆந் திகதி ரூபா 669,000 மதிப்பிட்டுப் பெறுமதியான 153 சொத்து உருப்படிகள் ரூபா 36,410 இற்கும் முகாமைத்துவ சபை அங்கீகாரமொன்று இல்லாமல் நிறுவகத்தின் ஊழியர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. விலை மதிப்பீட்டுத் திணைக்களம் கூடிய பெறுமதியொன்றை வழங்கியிருந்த இச்சொத்துக்கள் இவ்வாறு மிகவும் குறைந்த

- பெறுமதிக்கு விற்பனை செய்தமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவு படுத்தப்படவில்லை. ஒரு பெண் உத்தியோகத்தரால் கைதவிர்க்கப்பட்ட 153 சொத்து உருப்படிகளில் 112 ஐ ரூபா 7,110 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவர் கொள்வனவு செய்த சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 420,750 ஆக இருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 48,834,179 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 40,784,288 ஆக இருந்தயைால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் அதிகரிப்பு ரூபா 8,049,891 ஆகக் காணப்பட்டது. சொத்து மீள்மதிப்பீட்டு மிகை ரூபா 10,661,270 ஆல் அதிகரித்தமை இவ்வதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் டுபாய் கிளையில் ரூபா 58.2 மில்லியன் மோசடி தொடர்பாக 2009 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற பொது முயற்சிகள் குழு அறிக்கையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரை அடிப்படையில் புலனாய்விற்காக 2011 மார்ச் 29 ஆந் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடமிருந்து நிறுவகத்திற்கு இதுவரை எதுவித அறிக்கையொன்றும் கிடைக்கப்பெறாமல் இருந்ததுடன், நிறுவகம் விசாரணையை துரிதப்படுத்துவதற்காக எதுவித நேரடி பங்களிப்பொன்றையும் வழங்கியிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமலும் பிணைப்பொறுப்பொன்றையும் பெற்றுக்கொள்ளாமலும் நிறுவகத்தினால் வெளிநபரொருவருக்கு 2014 திசெம்பர் 15 ஆந் திகதி ரூபா 820,000 முற்பணமொன்று பட்டமளிப்பு விழாவிற்கான உணவு உபசரிப்புச் செலவினத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2015 மே 30 ஆந் திகதி வரையிலும் மேற்குறித்த முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீள் மதிப்பீட்டிற்குட்பட்டிருந்த 4 வகைக்குரிய சொத்துக்களில் ஒவ்வொரு சொத்து அணியினையும் மதிப்பீடு செய்வதற்கு உத்தேச திகதியிலான கிரயத்திற்குச் சமமான உருப்படிகள் உள்ளடக்கப்பட்ட பட்டோலையொன்று மதிப்பீட்டாளருக்கு வழங்கப்படாமல் இருந்ததுடன், பௌதீக ரீதியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த உருப்படிகள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக சொத்து அணிக்குரிய அனைத்து உருப்படிகளும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதா எனவும் மீள்மதிப்பீட்டுத் திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் அணிக்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ள சகல சொத்துக்களும் சரியாகக் காணப்பட்டதா என உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. இதன் பிரகாரம் மேற்படி மீள்மதிப்பீடு சரியாக மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 50 பேரைக் கொண்டிருந்ததுடன், அதில் 33 பேருக்கு கணக்காண்டு இறுதித் திகதி வரையிலும் வெற்றிடங்கள் காணப்பட்டன. வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நிறுவகத்தினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்ததுடன், நிரந்தர பதவிகளில் கடமை மேவுகை செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மனித வளத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரித்தல்லாத பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இப்பதவிகளில் கடமை மேவுகை செய்வதற்காக உயர் கல்வி அமைச்சின் அங்கீகாரமொன்று இல்லாமல் ஒப்பந்த அடிப்படையில் 8 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

மேற்படி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கும் அவர்களின் சம்பளம் மற்றும் படிகளைத் தீர்மானிப்பதற்கு 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.7 மற்றும் 9.10 இன் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்

2003 யூன் 2 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டொன்றிற்கு ஆகக் குறைந்தது 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2015 யூன் 15 ஆந் திகதி வரையிலும் 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் நிர்வாகம்

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு

(இ) ஆளணி முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# கணக்காய்வு அறிக்கை - 2014 இல் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக நிறுவகத்தின் கருத்துக்கள்

2.2.1. இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தராதரங்கள்

2012 இல் ஆரம்பிக்கப்பட்ட ஆதனங்களின் மீள்மதிப்பீடு 2013 ஆம் ஆண்டுவரை தொடர்ந்ததோடு 2012 இறுதிப்பகுதியிலும் 2013 ஆம் ஆண்டுக்காலப்பிரிவிலும் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மீள்மதிப்பீட்டு அறிக்கை திகதியன்று மேற்குறிப்பிட்ட ஆதனங்களின் முகப்பு மதிப்பீட்டுக்கும் உண்மை மதிப்பீட்டுக்குமிடையே பொருள்சார்ந்த வேறுபாடு காணப்படவில்லை, இந்த ஆதனங்கள் மீள்மதிப்பீடுசெய்யப்பட்ட ஆதனங்களுடன் இணைத்து கணக்கீடுசெய்யப்பட்டன.

**2.2.2. கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிறுவகத்திடம் காணப்பட்ட ஆதனங்களில் பின்வரும் பொருட்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. அதாவது தளபாடங்கள், கல்விசார் உபகரணங்கள் மற்றும் இயந்திரசாதனங்கள் என்பனவாகும். ஆதனங்களின் உற்பத்ததித்திறன் காலத்தை மதிப்பிடுவதற்கான மூவர் அடங்கிய குழுவிற்கு உசாவுநராக நியமிக்கப்பட்டவர் ஒரு இயந்திரவியல் பொறியியலாளராக இருந்ததோடு 25 வருடங்களுக்கு மேலாக கற்பித்தலில் ஈடுபட்டிருந்தார். குழுவின் ஏனைய இரு அங்கத்தவர்களும் பல்கலைக்கழகங்களில் 29 வருடங்கள் சேவைகொண்ட சிரேட்ட நிறைவேற்று அலுவலர்களாக இருந்தனர். இந்தவகையில் குழு குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக அதிகூடிய தகைமைகளை கொண்ட அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக இருந்தது.

2.2.3. கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2015 யூலை 07 ஆந் திகதியன்று பிரதி கணக்காய்வாளர் நாயகத்துடனான கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டவாறு மீள்மதிப்பிடப்படாத ஆதனங்கள் கிரய அடிப்படையில் 2015 ஆம் வருடத்தில் கணக்கிடப்படும். ஏதாவது திருத்தங்கள் செய்யப்படவேண்டியிருந்தால் நிதிசார் கூற்றுக்களுக்கு அமைவாக சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறு முதிர்ச்சியற்ற வைப்புக்கள் தொடர்பில் உறப்பட்ட வட்டி வருமானம் வங்கியிலிரந்து பெற்றுக்கொண்ட கூற்றொன்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்டிருக்கின்றது. கணனி மயப்படுத்தப்பட்ட தரவின் அடிப்படையில் வங்கியினால் தயாரிக்கப்பட்ட வட்டி வருமான அறிக்கைய ஏற்றுக்கொள்வதானது ஒப்பீட்டு ரீதியில் கையினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை விட மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்பது நிறுவகத்தின் கருத்தாக உள்ளது.

(இ) 2015 ஆம் ஆண்டுக்கு கணக்குகள் தயாரிக்கப்படும்போது இந்தப் பிழைகள் சீராக்கப்படும்.

**2.3. போதிய அதிகாரத்தினால் ஆதரவளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

(அ) பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பொது முயற்சியான்மை சுற்றறிக்கை இல 380 பிரயோகிக்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களளின் நோக்கம் யாதெனில் பல்வேறுபட்ட நிறுவனங்களின் பதவியினருக்கு அவர்களது வேண்டுகோள்களின் அடிப்படையில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை வடிவமைத்து நடாத்துவதாகும். இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் பிரதான நோக்கம் யாதெனில் கூட்டாண்மைத்துறையின் ஆளணியின் குறிப்பான பயிற்சி மற்றும் அபிவிருத்தி தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகம் தன்னகத்தே கொண்டுள்ள முகாமைத்துவ விசேடத்துவங்களை பிரயோகிப்பதாகும். உசாவுகை சேவைகள் தன்மைவாய்ந்த இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பட்டப்பின்படிப்பு, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள் வகுதியினுள் வராத தனியார் நிறுவனங்களின் வேறுபட்ட தேவைப்பாடுகளுக்கு பொருத்தமானதாக வடிவமைப்பதாகும்.

பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி, உசாவுகை சேவைகள் என்பவை உழைக்கின்ற வருமானங்கள், ஏற்படுகின்ற செலவினங்கள் என்பன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது நிதி சுற்றறிக்கை இல 380 உடன் தொடர்பானதாகும். பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த சுற்றறிக்கையின் பயிற்சி, உசாவுகை சேவைகள் வகுதிகளின் கீழ் வருகின்றது. 2007 ஆம் ஆண்டின் வெளியிடப்பட்ட தேசிய பொருட்கொள்வனவு முகவராண்மையின் தேசிய உசாவுகை சேவைகள் கைநூலின் 1.2.1 பிரிவின் பொருட்கொள்வனவு வழிகாட்டல்கள்

உசாவுகையின் கீழ் பதவியினர் திறன் கட்டியெழுப்புகை, பயிற்சி, அறிவுப்பரிமாற்றம் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது

(ஆ) நிறுவனம் அது உழைக்கின்ற நிதியத்தினாலே இயங்குகின்றது. இந்த கொடைகள் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் செய்யப்படுவதோடு நிறுவனசார் சமூக பொறுப்புக்களிலும் விழிப்பணர்வுடன் காணப்படுகின்றது.

2.4. பெறப்படவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

(அ) சர்வதேச கிளையுடன் தொடர்பான பெறவேண்டிய மற்றும் செலுத்தத்தக்க கணக்குகளின் நிலுவைகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு போதிய தகவல்களை பெற்றுக்கொள்வது சாத்தியமானதாக இருக்கவில்லை. சர்வதேச கிளையின் கணக்ககள் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் புலன் விசாரணையொன்று நடாத்தப்பட்டுவருகின்றது.

(ஆ) திரு சந்தன சந்திரசிரியிடமிருந்து நிலுவையாகவுள்ள தொகையை மீட்பதற்கான விழிப்புணர்வு உத்தரவாததாரர்களினால் செய்யப்பட்டிக்கின்றது. இதற்கான சட்ட நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும் திரு சந்தன சந்திரசிரி தற்போது ரூபா 15,000 மாதாந்தம் செலுத்திவருகின்றார். முகாமைத்துவ சபை அவர் இத்தொகையை செலுத்துவதற்கு அனுமதியளித்திருக்கின்றது. அவரது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஏனைய நலன்களிலிருந்து ஏனைய ஏதாவது மேலதிக மீட்புக்கள் இருக்குமாயின் அவையும் அவ்வாறு மேற்கொள்ளப்படும்.

<u>2.5. சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இயைந்துசெல்லாமை.</u>

(அ) நிறுவகத்தின் நிதிகளில் மேலதிகமான தொகையொன்று காணப்படும் பட்சத்தில் முகாமைத்துவ சபை கூடும்வரை தாமதிக்காது பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் அத்தொகை அரச வங்கிகளில் முதலீடு செய்யப்படும். அத்தகைய முதலீடுகளுக்கு முகாமைத்துவ சபையின் காப்பு அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) பல்கலைக்கழக தாபனக்கோவையின் 5.1 ஆம் பந்தி மேலதிக நேர கொடுப்பனவு பற்றி விபரிக்கின்றது. குறிப்பிடப்படுகி;னற அலுவலர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு அதன் அடிப்படையில் அடம்பெறவில்லை ஆனால் தாபனக்கோவையின் பந்தி 8 (iii) இனால் முகாமைத்துவ சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் வெளியக ரீதியான அடிப்படையில் செய்யப்பட்ட நியமனங்கள் ஊடாக வழங்கப்பட்டிருக்கின்றது. நிறுவகத்தின் கல்விசார் செயற்பாடுகள் வார நாட்களில் 1700 மணியிலிருந்ர் 2100 மணிவரை இடம்பெறுவதாலும் வார இறுதி நாட்களிலும் பொது விடுமுறை தினங்களிலும் இடம்பெறுவதாலும் இந்த அலுவலர்களின் சேவை மிகவுமே அவசியமானதாகும்.

நிறுவகம் சுய நிதியிடல் அடிப்படையில் இயங்குவதால் வேலை நேரத்திற்கு பின்னரும் வார இறுதி நாட்களிலும் பணிபுரிகின்ற பதவியினரின் கொடுப்பனவு தொடர்பான தீர்மானம் 2015 செப்டெம்பர் 4 ஆந்திகதிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கடிதத்தினால் முகாமைத்துவ சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

இ) 2014 சனவரி 30 ஆம் திகதியன்று ஊழியர்களுக்கு விற்பனைசெய்யப்பட்ட பொருட்கள் பாவனைசெய்யமுடியாதவையாக அடையாங்காணப்பட்ட ஆதனங்களாகும். இந்த பொருட்களின் பெறுமதி பூச்சியமாக இருப்பதால் அவற்றை அகற்றுவது அவசியமாக இருந்தமையினால் நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் அங்கீகாரத்துடன் கேள்விமனுக்களை அழைத்து, போட்டித்தன்மை அடிப்படையில் இப்பொருட்கள் ஊழியர்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. இந்த அங்கீகாரம் ப.மா.ஆ. சுற்றறிக்கை இல 2013/09 இன் வாசகம் 4.10 ஏற்பாட்டின் அடிப்படையில் அமைந்ததாகும். நிறுவகத்தின் மொத்த ஆதனங்களுடன் ஒப்பிடும்போது இந்த ஆதனங்களின் பெறுமதி மிகவுமே குறைவாக இருப்பதால் இவற்றின் பெறுமதிகளை மதிப்பிடுவது நிதிரீதியாக விளைவுப்பெருக்கம் அற்றது என கருதப்பட்டது.

2015 பெப்ருவரி 21 ஆந் திகதி விற்பனைசெய்யப்பட்ட ஆதனங்கள் பாவனைக்குதவாவையாக அடையாளங்காணப்பட்டு 2014 திசம்பர் 31 ஆந் திகதி முதல் அகற்றப்பட்டவையாகும். இந்த சொத்துக்களின் முகப்புப் பெறுமதி ரூபா 171,905 ஆகும் அவை ப.மா.ஆ. சுற்றறிக்கை இல 2013/04 இன் 4.10 ஆம் வாசகத்தின் பிரகாரம் நிறுவகத்தின் பணிப்பாளரின் அங்கீகாரத்துக்கமைய ஏலவிற்பனையொன்றின் மூலம் ஊழியர்களுக்கு விற்கப்பட்டன.

## 3.2. நிறுவனத்தினால் அல்லது நிறுவனத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டிருக்கின்ற சட்ட செயற்பாடுகள்

தொடர்புடைய புலனாய்வுகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றன நிறுவகத்திடமிருந்து தேவையானபோது தகவல்கள் பெறப்படுகின்றன.

## 4.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

அ) 2014 ஆம் ஆண்டில் பட்டமளிப்பு வழாவின் சில செயற்பாடுகள் நிறுவகத்தின் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டன இதோடு தொடர்புடைய செயற்பாடுகளுக்கான முற்பணங்கள் வழங்கப்பட்டன. தொண்டர் பணி அடிப்படையில் நிறுவகத்தின் அலுவல்களில் சம்பந்தப்பட்ட மாணவர்களிடமிருந்து செயலாற்றுகை பிணைகளை பெற்றுக்கொள்வது நடைமுறையில் சாத்தியமானதல்ல. முற்பணத்தின் 95 வீதமானவை அனுசரனையாளர்களால் கொடையாக வழங்கப்பட்ட நிதிகளிலிருந்து எற்கெனவே செலுத்தப்பட்டிருக்கின்றன.

ஆ) கடந்த 29 வருட காலப்பகுதியல் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்களின் அநேகமானவற்றின் முகப்புப் பெறுமதி மீள் பெறுமதிசெய்யப்பட்டபோது பூச்சிய பெறுமதிகளை சுட்டிக்காட்டின. இந்த ஆதனங்களின் செலவு அட்டவணையொன்றின் தயாரிப்பு சாத்தியமற்றதால் கணக்கிடப்பட்ட அனைத்து ஆதனங்களும் பௌதீக ரீதியாக காணப்படுகின்றன கருதப்பட்டு கணகக்ிடப்பட்டிருக்கின்றன.நிறுவகத்திற்கு சொந்தமான அனைத்து ஆதனங்களும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பௌதீக ரீதியாக காணப்படவில்லை என்ற அடிப்படையில் நிறுவகம் எந்தவொரு தகவலையும் கொண்டதாக இல்லை.

## 4.2 ஆள்சார் நிருவாகம்

(அ) நிறுவகத்தின் ஆளணிக்கு உரிய பெரும் எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் கல்விசார் வகுதியிலேயே உள்ளன. இந்த வெற்றிடங்களை நிரப்ப தொடர்புடைய நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டபோதிலும் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் காணப்படாமையினால் பதவிகளை நிரப்பமுடியவில்லை. ஆளணியிலுள்ள பதவிகளில் தற்போது பொருத்தமில்லை என கருதப்படகின்றவற்றை நீக்கிவிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(ஆ) நிறுவகத்தினால் பல புதிய பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் தேவையைப் பொருத்து ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. நிறுவன கட்டளைச்சட்டத்தினால்

இந்த ஆட்சேர்ப்புகள் தொடர்பில் முகாமைத்துவ சபை தத்துவமளிக்கப்பட்டிருக்கின்றது.

இல்5. பொறுப்புக்கூறுதலும் நல்லாட்சியும்
கலந்துரையாடப்பட தேவையான விடயங்களை கருத்திற்கொண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**பணிப்பாளர்**
**முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்**
**2015 திசெம்பர், 31 ஆம் திகதி**